AR
58

# திருவானைக் கோயில்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை – 600 008.
2016, திருவள்ளுவர் ஆண்டு – 2047

# திருவானைக் கோயில்

பதிப்பாசிரியர்
முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப.,
ஆணையர்

ஆசிரியர்
**பொ. பாஸ்கர்**

**தமிழ்நாடு அரசு**
**தொல்லியல் துறை வெளியீடு**
**சென்னை – 600 008**
**2016 – திருவள்ளுவராண்டு 2047**

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| TITTLE | : | TIRUVANAI KOIL |
| Editor | : | Dr. T. Karthikeyan, IAS<br>Commissioner |
| Author | : | P. Baskar |
| Copy Right | : | Tamilnadu State Department of Archaeology |
| Subject | : | History |
| Languages | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 279 |
| Year | : | 2016 |
| No. of Copies | : | 1000 |
| Type Point | : | 12 |
| No of pages | : | 88 |
| Printer | : | Tharamani Womens Printing<br>Co-op Society,<br>#46, Petters Road,<br>Royapettah, Chennai-14. |
| Publisher | : | State Dept. of Archacology<br>Tamil Valarchi Valagam<br>Halls Road, Egmore<br>Chennai - 600 008 |
| Price | : | Rs. 38.00/- |



முன் அட்டை : கோயிலின் தென் மேற்குத் தோற்றம்
பின் அட்டை : பெருமாள் செப்புத் திருமேனி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | (i) |
| 1. | முன்னுரை | (iii) |
| 2. | ஊர் அமைவிடம் | 1 |
| 3. | இலக்கியச் சான்றுகள் | 2 |
| 4. | கோயிலின் அமைப்பு | 3 |
| 5. | கோயிலின் கட்டடக் கலை | 8 |
| 6. | சிவவழிபாட்டின் தொன்மை | 14 |
| 7. | சிற்பக் கலை | 17 |
| 8. | கல்வெட்டுகள் | 30 |
| 9. | கல்வெட்டு செய்திகள் | 33 |
| 10. | அரசியல் | 39 |
| 11. | பொருளாதாரம் | 55 |
| 12. | எடுத்தாண்ட நூல்கள் | 58 |
| 13. | வரைபடம் | 59 |
| 14. | நிழற்படங்கள் | 61 |

முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப.,
ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம் செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973-74-ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் என்னும் முதுகலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 219 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து அவ்வூர் மற்றும் அவ்வூரில் அமைந்துள்ள கோயில்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 33ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2009-10-ஆம் ஆண்டு பயின்ற திரு.பொ.பாஸ்கர் அவர்கள் எழுதிய திருவானைக் கோயில் என்னும் ஆய்வேடு தற்போது 34-ஆவது நூலாக வெளிவருகிறது. இந்நூல் தமிழ்நாட்டில் புகழ்பெற்ற வரலாற்றுத் தலமாக விளங்கும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருவாலீஸ்வரர் திருக்கோயிலின் கட்டடக்கலை, சிற்பம் ஆகியவை பற்றியும், அக்கோயில் கல்வெட்டுகளின் மூலம் அக்கால



அரசியல், சமுதாய பொருளாதாரச் செய்திகளையும் விரிவாக விளக்குகிறது.

திருவானைக் கோயில் என்னும் இந்நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் முனைவர் சீ.வசந்தி, உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர் திரு.இரா.சிவானந்தம், மேலும் இந்நூலை நல்ல முறையில் அச்சுப்பிழைத் திருத்திய திருமதி. ச.சரஸ்வதி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்த வரலாற்று நூலினை வெளிக் கொணர 2015-2016-ஆம் ஆண்டு "**தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின்**" கீழ் நிதியுதவி நல்கி சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்களுக்கும், தொல்லியல் பயிலும் மாணவர்களுக்கும், தொல்லியல் ஆர்வலர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆணையர்.

# முன்னுரை

வரலாறு என்பது பண்டைய மக்களின், அரசர்களின் வாழ்க்கை வழிமுறைகளையும், அரசியல், பொருளாதாரம் மற்றும் வழிபாடு முறைகள், சிற்பம் மற்றும் கட்டடக்கலைப் பற்றி எடுத்துரைப்பதாகும். அதன் வழியே நான் ஆய்வு மேற்கொண்டுள்ள இந்தக் கோயிலின் வரலாறாகும். இக்கோயில் திருவானைக்கோயில் என்ற கிராமத்தின் மத்தியில் தெற்கு முகமாக தோற்றம் கொண்டும், கோயிலின் கிழக்கு முகத்தில் ஏரி வெட்டி நீர்த்தேக்கம் செய்துள்ளனர்.

பொதுவாக வரலாற்றைக் கண்டு கொள்ள பயன்படும் மூலசாதனங்கள், இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓவியங்கள், மற்றும் கோயிலின் கட்டடக் கலை, நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவைகளின் மூலம் வரலாற்றைக் காணமுடிகிறது. இங்கே இக்கோயிலின் வரலாற்றை இங்குள்ள கல்வெட்டைக் கொண்டும், சிற்பங்கள், கட்டட அமைப்பு மூலம் ஆய்வு செய்யப்படுகிறது.

பின்வரும் செய்திகளின் மூலம் இவ்வூரின் கோயில்களின் வரலாற்றைக் காண்போம்.

“தொண்டை நன்னாடு சான்றோருடைத்து” என்று கூறுவர். சான்றோர் பலரை ஈன்றெடுத்த தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக அமைவது செங்கற்பட்டு மாவட்டம், தமிழக வரலாற்றில் தனிச்சிறப்புப் பெற்று விளங்கும் மாவட்டங்களில் இம்மாவட்டமும் ஒன்று. இலக்கியச் சிறப்பாலும், கலைப்பணியாலும், அரசியல் தொண்டாலும் ஆன்மீகப் பயிர் வளர்த்த மேன்மையாலும் இம்மாவட்டம் உலகம் போற்றும் உயர் சிறப்பைப் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்துள்ளது.



தமிழகத்தின் கிழக்குக்கரையில் அமைந்துள்ள இம்மாவட்டம் இயற்கையமைப்பால் இயல்பாகவே சிறந்து விளங்குகிறது. ஆழ்கடல் ஒரு பக்கம் அணி செய்ய, அழகிய குன்றுகள் ஆங்காங்கு காட்சிதர, நெல் விளையும் கழனிகள், நீர்வளம் கொண்ட ஏரிகள், முல்லை நிலக்காடுகள் என்று ஐவகை நிலப்பிரிவையும் பெற்று இம்மாவட்டம் உள்ளடங்கிய பகுதியை ஆட்சி செய்துள்ளனர். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழகத்தின் ஒரு பகுதியான இம்மாவட்டத்தைத் தமிழர்கள் ஆண்ட காலத்தினைக் காட்டிலும் பிற நாட்டினர் ஆண்ட காலமே அதிகம். தெலுங்கு மொழி பேசப்படும் ஆந்திர மாநிலத்திற்கு அண்மையில் இம்மாவட்டம் அமைந்துள்ளதால் அம்மொழிகள் செல்வாக்கும், அம்மாநிலத்தினரின் பண்பாட்டின் சாயல்களும் இம்மாவட்ட மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. எனினும் தன்னியல்பில் மாறாது பல நிலைகளிலும் இம்மாவட்டம் தமிழகத்திற்கே வழிகாட்டியாக அமைந்து விளங்குகிறது.

கல்லெல்லாம் சிலை வடித்த பல்லவப் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதி இம்மாவட்டம், பல்லவ மன்னர்கள் ஆண்டதற்கு அடையாளச் சின்னங்களைப் பெற்றிருப்பதுடன், அவர்கள் ஆண்டதால் பல அரும் சிறப்புகளையும் இம்மாவட்டம் பெற்றுச் சிறப்படைந்துள்ளது. அன்று தொட்டு இன்று வரை கலைநயம் பெற்றுச் சிறப்படைந்து பெருமைக்குரிய மாவட்டங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

## மாவட்டத்தின் அமைப்பு

பிரிக்கப்படாத இன்றைய மாவட்டங்களில் பெரிய மாவட்டமாகத் திகழும் செங்கற்பட்டு மாவட்டம் எல்லையமைப்புகளால் தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.

இம்மாவட்டத்து வடக்கு எல்லையாக ஆந்திர மாநிலத்தின் நெல்லூர் மாவட்டம் அமைந்துள்ளது. தெற்கில் தென்னார்க்காடு மாவட்டமும், மேற்கில் வடார்க்காடு, சித்தூர் மாவட்டங்களும் அமைந்துள்ளன. கிழக்கில் வங்காள விரிகுடா அமைந்துள்ளது. அண்மையில் உள்ள தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகர், இம்மாவட்டத்தால் மூன்று புறங்களிலும் சூழப்பட்டுள்ளது. இம்மாவட்டப் பரப்பில் சுமார் 115 மைல் நீளத்திற்குக் கடற்கரை அமைந்துள்ளது. 1961 ஆம் ஆண்டின் அரசுக் குறிப்பின்படி சுமார் 3,188 சதுர மைல் பரப்பளவில் இம்மாவட்டம் அமைந்துள்ளது. இன்று சில சதுர மைல்கள் வேண்டுமானால் வேறுபட்டு அமையலாம்.

தொண்டை மண்டலம் என்பது அருவாநாடும், அருவா வடதலை நாடும் சேர்ந்த பகுதி. இப்பகுதி பல நூற்றாண்டுகளாகவே கிடந்துள்ளது என்பதை இம்மாவட்ட ஊர்ப்பெயர்களில் காடு என்ற பொதுக்கூறு பெற்றுப் பல ஊர்கள் அமைந்திருப்பதன் மூலம் உணரலாம். ஈக்காடு, ஆர்க்காடு, பழவேற்காடு, ஆலங்காடு, வெளிக்காடு, கோட்டைக்காடு, தோட்டக்காடு, ஊத்துக்காடு, முதுகாடு, ஒதிக்காடு போன்ற பல ஊர்கள் காடு என்று முடியுமாறு இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்காடுகள் பின்பு கழனிகளாகவும், தோட்டங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன.

காட்டுப் பகுதிகளாகத் தொண்டை மண்டலம் ஒரு காலத்தில் இருந்திருந்தாலும், மண்வளம் மிக்க இப்பகுதியில் மனவளம் மிக்க சான்றோர்கள் தோன்றியுள்ளதை உணர முடிகிறது.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"



என்ற ஔவையார் பாடல் சான்றோர் பிறந்த தொண்டை மண்டலத்தை எண்ணியே பாடப்பட்டதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

தொண்டை மண்டலம் முற்காலத்தில் சோழ நாட்டின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. கரிகாற்சோழனுக்குப் பின்பு வென்வேற்கிள்ளி என்ற சோழ அரசனின் மகனாகிய தொண்டைமான் இளந்திரையன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் என்றும், அவன் பெயரே இந்நாட்டிற்கு வந்ததென்றும் கூறப்படுகிறது.

தொண்டை மண்டலம் என்ற பெயரை இம்மண்டலம் பெறுவதற்குக் காரணமாக வேறு சில நிகழ்ச்சிகளும் கூறப்பட்டாலும் தொண்டைமான் இளந்திரையன் பெயராலேயே அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்து பலராலும் வலியுறுத்தப்படுவதால் அப்பெயரே பொருந்தும் என்று கருதலாம்.

## தொண்டை நாடும் செங்கை மாவட்டமும்

தொண்டை மண்டலத்தில் 24 கோட்டங்கள் இருந்துள்ளன. அவற்றுள் 13 கோட்டங்கள் உள்ளடங்கிய பகுதியே செங்கற்பட்டு மாவட்டமாக அமைந்துள்ளது. அக்கோட்டங்களாவன :

1. புலியூர்க் கோட்டம், சென்னை, சைதாப்பேட்டை வட்டங்கள் அடங்கிய பகுதி.
2. புழல் கோட்டம் : பொன்னேரி வட்டத்தின் கடலோரப் பகுதிகள்
3. செங்காட்டுக் கோட்டம் : ஸ்ரீபெரும்புதூர் அதன் சுற்றுப்புறமும்
4. ஆமூர்க் கோட்டம்: மாமல்லபுரமும் அதன் சுற்றுப்புறமும்.
5. களத்தூர்க் கோட்டம் : திருக்கழுக்குன்றம், பொன் விளைந்த களத்தூர், அச்சிறுபாக்கம் பகுதிகளும், மதுராந்தகம் ஊரும்.

6. செம்பூர்க் கோட்டம்: மதுராந்தகம் வட்டத்தின் கிழக்குப் பகுதி

7. ஈக்காட்டுக் கோட்டம்: திருவள்ளுவர் வட்டம்

8. எயில் கோட்டம்: காஞ்சிபுரம் நகர்ப்பகுதி

9. தாமல் கோட்டம்: காஞ்சிபுரம் வட்டம் அடங்கிய பகுதி.

10. ஊத்துக்காட்டுக் கோட்டம் செங்கற்பட்டு நகரும் அதன் சுற்றுப்புறமும்

11. பையூர்க் கோட்டம் பொன்னேரி வட்டத்தின் சில பகுதிகள்.

12. திருத்தடிகைக் கோட்டம்: திருத்தணி வட்டம் அடங்கிய பகுதிகள்.

13. காலியூர்க் கோட்டம்: உத்திரமேரூர்ப் பகுதி

இன்று இம்மாவட்டத்தில் உள்ள வட்டங்களின் பெயர் எதுவும் கோட்டங்களின் பெயர்களால் இடம்பெறவில்லை. அன்றியும், இம்மாவட்டத்தில் உள்ள முக்கியமான நகரங்களின் பெயர்களும் கூடக் கோட்டப் பெயர்களால் இடம்பெறவில்லை இதனை நோக்கும்போது கோட்டங்கள் பிரிக்கப்பட்ட காலத்தில் இவ்வூர்களெல்லாம் செல்வாக்குப் பெற்ற சிறந்த ஊர்களாக விளங்கவில்லையா, அல்லது சிற்றூர் வடிவில் இருந்தனவா என்றெல்லாம் ஐயுற வேண்டியுள்ளது.

கலைச்சின்னங்களைத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கண்டுபிடித்துப் பேணிக்காத்து வருகின்றனர். தென்னகத்தில் கற்காலத்து ஓவியங்களைக் காணமுடிகின்றது. ஆனால், சங்க காலத்தவை கண்ணுக்குக் கிட்டாமல் கிடக்கின்றன. பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும், சாளுக்கியர் காலத்திலும், போசளர் காலத்திலும் உள்ள சிற்பங்கள், சுவர்க் கோலங்கள் முதலியவை ஆடை அணிகலன்களையும் பல்வேறு நிலைகளில் உள்ள வாழ்க்கையின் கோணங்களையும்



காட்டுகின்றன. அழகிய கோயிற் கட்டடங்கள் சமய வாழ்வுகள் விளக்கமளிப்பதுடன் தமிழகம் வளர்ந்த கட்டடக் கலையின் சிறப்பை விளக்குகின்றன.

## சாசனங்களும், பட்டயங்களும்

சாசனங்கள் இருவகைப்படும், அவை கல்வெட்டுகளும், செப்பேடுகளுமாகும். தமிழகத்தில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுகளில் காலத்தால் பழமையானவை “தமிழி” எழுத்துக்களாலான கல்வெட்டுகளாகும். கிறித்துவத்திற்க்கு முன் புத்த சமண சமயங்களின் வருகையுடன் தோன்றி இக்கல்வெட்டுகள் மொழி ஆய்வாளர்களின் இடத்தில் சில வரலாற்றுக் குழப்பங்களை ஏற்படுத்தியதுடன் இந்திய வரலாற்றாய்வாளர்களின் சில தவறுதலான முடிவுகளுக்கும் இடமளித்தனர். இடைக்காலத்துக் கல்வெட்டுகள் வட்டெழுத்திலும் கிரந்த எழுத்திலுமுள்ளன.

கி.மு.3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அசோகனின் “கிர்னா” கல்வெட்டு அன்றைய தமிழகத்து அரசுகளைக் காட்டுகின்றது. அன்று தமிழகத்தில் சோழர், பாண்டியர், சத்தியபுத்திர கேரள புத்திர, அரசுகள் இருந்தன. சமுத்திர குப்தனின் அலகாபாத்துக் கல்வெட்டில் தமிழகத்து அரசியல் செய்தி இருக்கின்றது. தமிழகத்துக்கு வடக்கில் சித்தபுரம், பிரம்மகிரி, மஸ்தி, ஏற்குடி முதலிய இடங்களிலும், தமிழகத்தில் இயற்கையாக அமைந்த துறவிகளின் இருக்கைகளிலும் காணக்கிடைத்த கல்வெட்டுகள் கிறிஸ்து ஊழியத்திற்கு முன்னரே தென்திசை நோக்கிச் சமணமும் பௌத்தமும் பரவியதை உணர்த்துகின்றன. அண்மையில் கிடைத்த சம்பை கல்வெட்டு அசோகர் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த அதியமான்களின் சமயப் பொறைக்கு விளக்கமளிக்கின்றது. எகிப்தில் தமிழ் எழுத்தாலான வாணிப ஒப்பந்தப் பட்டயம் தமிழ் வணிகனுக்கும் யவன வணிகனுக்குமிடையில் செய்த வாணிப ஒப்பந்தமாகும்.

கிறித்துவுக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழகத்துக்கும் மேல்நாட்டவர்களுக்கும் வாணிபத் தொடர்பிருந்ததை பிற ஆதாரங்கள் காட்டுவதை இது மேலும் உறுதி செய்கின்றது.

## கோயில் ஒழுகுகளும் தல புராணங்களும்

தமிழகத்து முக்கியக் கோயில்கள் அனைத்துக்கும் தலபுராணங்கள் உள்ளன. இவற்றில் குறைகள் மிகுதியாக இருப்பினும் வரலாற்றுத் துணுக்குகளும் உள்ளன. கோயில் ஒழுகுகள் சாசனங்களைப் போன்ற ஆதாரங்களாகும். ஸ்ரீரங்கம் கோயில் ஒழுகு தக்காணத்து அரசர்களின் ஆதிக்கம், விசயநகர வேந்தன் நரச நாயக்கனின் படையெடுப்பு, கோயில் குடியிருப்புச் சீரமைப்புப் பணிகள் ஸ்ரீரங்கத்து வைணவர்களுக்கும், திருவானைக் காவல் சைவர்களுக்கும் இருந்த சமயப்பூசல்கள் முதலியவற்றை உணர்த்துகின்றது.

அந்த காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் இறைவனுக்குக் கோயிலும், மன்னனுக்கு அரண்மனையும், சமுதாயத்தில் உயர்நிலையில் இருந்தவர்களுக்கு மாட மாளிகைகளும் அமைக்கப் பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் சங்க கால இலக்கியங்களில் நிரம்பக் கிடைக்கின்றன. நெடுநிலை மாடங்கள் பல இருந்தன என்பதை :

"புதுப்பிறை அன்ன சுதை செய் மாடத்து" என்று புறமும்,

"சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்" என்று பெரும்பாணாற்றுப்படையும்.

"மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிசை நெடுநிலை மாடந்திடை நிலத் திருந்துழி" என்று சிலம்பும்.



"குறியவு நெடியவுங் குன்று கண்டன்ன சுடுமண்ணோங்கிய நெடுநிலைக் கோட்டம்" என்று மணிமேகலையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென மணிப்புறா துறந்த மரஞ்சேர் மாடத்து" என்ற அகனாநூற்று வரிகளால் அறியலாம்.

"ஒரு திறம் சாரா அரைநாள் அமயத்து
நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி,
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுந்து"

என்ற நெடுநல்வாடை வரிகளால் உணரலாம். அத்தோடு மனையின் வாயில் குன்று குவிந்தன்ன அமைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதிலிருந்து குன்றைக் குடைவித்துக் கோயில் அமைத்தலும் அக்காலத்தே நிகழ்ந்திருக்கிறது போன்று தெரிகிறது.

ஆசிரியர்

# ஊர் அமைவிடம்
## (Location)

திருவானைக்கோயில் என்ற இந்த ஊரிலிருந்து வட மேற்கே 6 கி.மீ. தூரத்தில் செங்கற்பட்டும், மேற்கே 2 கி.மீ. தூரத்தில் புதுப்பாக்கம் என்ற சிறு கிராமமும் அமைந்துள்ளது. கோயிலின் தெற்கே நெற்கதிர்கள் பொன்னாக விளைந்த வரலாற்றுச் சிறப்பு பெயர் பெற்ற ஸ்தலம் விளங்கக் கூடிய பொன்விளைந்த களத்தூர் 12 கி.மீ. தொலைவில் உள்ளது. தென் கிழக்கு திசையில் இந்நெற்கதிர்களைச் சேமித்து வைக்கப்பட்ட கூடமான பொன்பதர் கூடம் என்ற கிராமம் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் சுமார் 20 குடும்பங்களும் 150 மக்களும் உள்ளனர். இதில் இருளர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர்.



# இலக்கியச் சான்றுகள்

திருவானைக்கோயில் பழமையும் வரலாற்றுச் சிறப்பும், மூர்த்திப் பெருமையும் கொண்டு விளங்கும் திருக்கோயில் ஆகும். அவைகளோடு இத்திருத்தலம் பெரியவர்களால் பாடப்பெற்ற தலமாக இல்லாவிடினும் இதே பெயர் கொண்ட திருவானைக் காவல் திருச்சி அருகே உள்ளது. அத்தலம் 18 பெரியவர்களால் பாடல் பெற்ற ஸ்தலமாகும்.

“சூழியிருந்த சுற்றங்கள் குணங்கள் பாராட்ட
வழியிருந்த அங்கங்கள் எல்லாம்-தழீயிருந்தும்
என்னைக்காவா! இதுதகா! என்னைமுன்
தென் ஆனைக்காவடை நீ சென்று”

என்றும் ஐயடிகள் காடவர் கோண் பாடிய வாழ்க்கை நிலையாமையையும், இறைவனை வழிபட வேண்டிய அவசியத்தையும் அறிவுறுத்துகிறது.

“திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே” என்று

திருவானைக்கா இறைவன் ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி இருப்பவன். அவன் ஞான வடிவானவன். அனைத்துமாய் உள்ள அவனை அறிந்து கொண்டவர்களுக்கு அல்லேதும் இல்லை என்று பாடுகிறார் திருநாவுக்கரசர் என்ற சில இலக்கியச் சான்றுகளே எனக்குக் கிடைத்துள்ளது.

# கோயிலின் அமைப்பு

இக்கோயிலின் அமைப்பானது பூமித்தலமாகக் காணும் போது கருவறை (Main Shrine) அந்தராளம் (or) அர்த்த மண்டபம் (Ardhamanda) மற்றும் தூண் மண்டபம் (Pillar Mandapa) வெளியே நந்தியும் பலி பீடமும் உள்ளது. இக்கோயிலின் முகப்பானது தெற்கே உள்ளது. இருந்தாலும் கருவறைக்கு நேராக கிழக்கு முகமாக இறைவனைக் காணும் விதம் நந்தி அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்கு மேலேயுள்ள விமானமானது வேஸர அமைப்பில் அதாவது அரைவட்ட வடிவில் கட்டப்பட்டுள்ளது. இதற்கு கஜபிரஷ்டம் என்ற பெயரும் உண்டு கஜம்-யானை பிரஷ்டம்-பின்பக்கம் யானையின் பின் பக்கம் போன்று காட்டப்பட்டுள்ளது. கருவறையின் சுற்றுப்பகுதியில் கோஷ்டங்களும் அதற்குரிய தெய்வங்கள் முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இதே மாதிரி அர்த்த மண்டபத்திலும் கோஷ்ட தெய்வங்கள் முறைப்படி பிரதிஷ்டை செய்து வைத்துள்ளனர்.

கோயிலின் அதிஷ்டானத்தில் கண்டப்பகுதியில் இராமயணச் சிற்பங்களும், யானைகள் சண்டையிடும் காட்சியும், தத்ரூபமாக வடித்துள்ளனர். இதில் சிறப்புக் காட்சி கஜசம்ஹாரமூர்த்தியின் உருவம் அளவில் சிறியதாக இருந்தாலும் சோழர்களுக்கே உரிய கலைப்பாணியில் அழகாகச் செதுக்கியுள்ளனர். மற்றும் பல சிற்பங்களும் காணப்படுகின்றன. மேலும் குமுதம், ஜகதி மற்றும் மகாபட்டிகை பக்கச் சுவர் போன்ற பகுதிகளில் கல்வெட்டுகள் தெளிவாகவும் அழகாகவும் பொறிக்கப்பட்டுள்ளது.



கோயிலைச் சுற்றிலும் கருங்கற்களால் மதில்சுவர் கட்டப்பட்டு கோயிலின் முகப்பு தெற்கே இருந்தாலும் நுழைவு வாயில் (Gopuram) கிழக்கே உள்ளது. நுழைவு வாயிலின் மேலே சிறு சாலை (Sala) வடிவில் அமைக்கப்பட்டு அதில் இறைவனும் இறைவியும் அமர்ந்த நிலையில் இருக்கும்படி வண்ண ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

மதிலுக்கு வெளியே ஆங்காங்கே கற்ச்சிற்பங்கள், முழுமையாகவும் உடைந்த நிலையிலும் பாதிவேலைபாடு செய்யப்பட்டும் காணப்படுகின்றன.

கருவறைக்கு வடக்கே சண்டிகேஸ்வரர் சிற்பம் காணப்படுகிறது. அர்த்த மண்டபத்தைத் தாண்டி தூண் மண்டபத்தின் ஆரம்ப இடத்தில் இடது பக்கத்தில் முருகன் வள்ளி, தெய்வானை சிற்பங்களும், வலது பக்கத்தில் விநாயகர் அமர்ந்த நிலையில் உள்ள சிற்பமும் காணப்படுகின்றது, கருவறைக்கு வடக்கே தூண் மண்டபத்தின் ஓரத்தில் அம்மன் சிற்பமும் உள்ளது. தூண் மண்டபத்தில் மொத்தம் 12 தூண்களும், அதில் 8 தூண்கள் முழுமையாகவும், 4 தூண்கள் அரைத்தூண்களாகவும் (Pilastor) காணப்படுகிறது. தூணின் மேலேயுள்ள போதிகை அமைப்பு சோழர்கால ஆரம்ப அமைப்பையேப் பெற்றுக் காணப்படுகிறது. இஃது கோயிலின் அமைப்பாகும்.

தமிழகக் கலை வரலாற்றில் கோயிற்க்கலை மிக இன்றியமையாத இடத்தை வகிக்கிறது. சமூகத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள இக்கோயில்கள் சமயத்தின் சின்னங்களாக விளங்குகின்றன. கோயிற்க்கலை என்பது பொதுவான ஒரு கலையாக இருப்பினும் அதில் ஒவ்வொரு சமயத்திற்கான குறிப்பிட்ட சில வேறுபாடுகளுடன் கூடிய அமைப்புகள் உள்ளன.

தமிழகத்தில் இந்து சமயத்தைச் சார்ந்த கோயில்கள் துவக்க காலத்தில் கல்லினால் அமைக்கப்படவில்லை. அதற்குரிய காரணங்களை ஆராய்கின்றபொழுது, அக்கால மக்கள் கற்களைக்

கோயிற்கலைக்குப் பயன்படுத்துவதை அறியாமல் இருந்திருக்கலாம். அல்லது இறந்துபட்ட வீரர்களின் நினைவாக நடுகல் எழுப்பும் வழக்கம் இருந்ததினால் இறந்தவர்களோடு தொடர்புடைய கல்லினை இறைவனோடு தொடர்புபடுத்த வேண்டாம் எனக் கருதியிருக்கலாம்.

துவக்கக்காலத்தில் மனிதன் தன் குடியிருப்புக்களை மரங்களை வைத்து எவ்வாறு அமைத்தானோ அதுபோல இறைவனுக்கும் கோயில் அமைத்துள்ளான். இதனைக் கோயில் அமைப்பில் இடம் பெறும் பெரும்பாலான பகுதிகள் வீட்டின் அமைப்பு ஒத்திருப்பதை வைத்து அறிய இயலுகிறது. மரங்கள் மழையிலும், வெயிலிலும் பட்டு விரைவில் சிதைந்ததால் கோயில்களைப் பின்னர் செங்கல், சுண்ணாம்பு, சுதை, உலோகம், முதலிய பொருட்களால் கட்டினர். இத்தகுக் கட்டுமானமும் இருநூறு, முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் சிதைந்து விடுவதால் பின்னர் கருங்கற்களைக் கொண்டு கோயில் கட்டப் பயன்படுத்தினர்.

தமிழகத்தில் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் தான் (கி.பி.7-ஆம் நூற்றாண்டு) முதன் முதலில் மலையைக் குடைந்து குடைவரைக் கோயில் அமைக்கப்பட்டது. இச்செய்தியினையும், மகேந்திரவர்மன் காலத்திற்கு முன்னர் கற்கள் கோயில் கட்டப் பயன்படுத்தப்படவில்லை என்பதையும், அவனது மண்டகப்பட்டுக் குடைவரைக் கோயிலில் (கிரந்தம்) வடமொழியில் உள்ள கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது. எனவே கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் இருந்த கோயில் அமைப்புகள் நமக்குக் கிடைக்கவில்லை. அக்காலகட்டத்தில் இருந்த கோயில் அமைப்புகளை இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள செய்திகளைக் கொண்டே அறிய இயலுகிறது என்றாலும், இலக்கியங்களில் கோயிற்க்கலை அல்லது கட்டுமானம் தொடர்பான முழுமையான செய்திகள் இடம் பெறவில்லை.

## தூண்கள்

கோயிற் கட்டடக் கலையில் தூண்கள் அரைத் தூண்கள், முழுத்தூண்கள் என இரண்டு விதமாக அமையும். அரைத்தூண்கள்



என்பவை கருவறையில் சுவற்றில் புடைப்பாகத் தூண்களின் ஒரு பகுதி அமைப்பு வெளியில் தெரியும்படி அமைக்கப்படும். முழுத்தூண்கள் பயன்பாட்டு அளவில் கூரையைத் தாங்குவதற்காக அமைக்கப்படும்.

அரைத்தூண்கள் அழகிற்காக அமைக்கப்படும். குடைவரைக் கோயில்களில் இடம் பெற்ற தூண்கள் மகேந்திரவர்மன் பாணி, மாமல்லன் பாணி, இராசசிம்மன் பாணி என மூன்றுவிதமான பாணிகளில் அமைக்கப்படும். இதற்கு தூண்களை அழகு படுத்துவதற்காக அதில் தாமரை வட்டங்களைச் செதுக்குவதுண்டு, பிற்காலத்தில் கட்டுமானக் கோயில்களில் இடம் பெற்ற தூண்களில் நாகபந்தம், கொடிக்கருக்கு வேலைப்பாடுகள் போன்றவை இடம் பெற்றன. மேலும் தூணின் மேற்பகுதியில் மாலத்தானம், பத்மபந்தம், கலசம், தாடி, குடம், பலகை, வீரகண்டம், போதிகை முதலான உறுப்புகள் இடம்பெறும்.

## போதிகை

போதிகை என்பது தூணின் மேற்பகுதியில் தூணுக்கும் கூரைக்கும் இடையில் இடம் பெறும் உறுப்பாகும். இது மேல்தளத்தைத் தாங்கும் பகுதி என்பதால் தூணின் மேற்பகுதியில் இருபுறமும் தூணைவிடச் சற்று வெளியே நீட்டியபடி அமைக்கப்பட்டிருக்கும். இது அழகு செய்யப்படாத நிலையிலும் கடல் அலை போன்ற மடிப்புக்களைக் (தரங்க போதிகை) கொண்டும் அமைக்கப்படும். இதுவே பிற்காலக் கட்டுமானக் கோயில்களில் வெட்டுப் போதிகை, ஆப்பு முனைப் போதிகை, வாழைப்பூப் போதிகை எனப் பல விதமான வளர்ச்சியை ஒவ்வொரு அரசபரம்பரையினர் காலத்திலும் அடைந்தது.

## கபோதம்

கபோதம் என்பது சுவரின் மேற்பகுதியில் அதாவது பிரஸ்தரப் பகுதியில் இடம்பெறும் கூரையின் வெளியில் நீட்டியபடி அமைந்திருக்கும் பகுதியாகும். இது மழைக்காலங்களில் கூரையின் மேற்பரப்பில் தேங்கும் தண்ணீர், சுவரை நனைக்காமல்

பாதுகாப்பதற்காக வளைந்த நிலையில் அமைக்கப்படும். இது கவிழ்ந்த நிலையில் இருப்பதால் கபோதம் என்ற பெயரைப் பெற்றது எனலாம்.

### நாசி

நாசி என்பது விமானத்தின் சிகரப்பகுதியில் இடம்பெறும் உறுப்பாகும். இது மூக்கில் உள்ள துளைகளைப் போல் விமானத்திற்குள் வெளிச்சமும் காற்றும் வருவதற்காகத் துளைகளுடன் அமைக்கப்படும் பகுதியாகும். இதனை "வித்தகநாசி வேண்டிடத் திரீஇத்" எனும் பாடலடி விளக்குகிறது.

### கலசம்

கலசம் என்பது விமானத்தின் சிகரப்பகுதிக்கு மேல் இடம்பெறும் உறுப்பாகும். இதனை மனிதனுக்குத் தலையில் உள்ள கீரிடம் போல் விமானத்திற்குக் கலசம் என ஒப்பிட்டுச் சொல்லலாம்.

### கூடமும், உத்திரமும்

கூடம் என்பது மண்டபம் ஆகும். இம்மண்டபம் பெரிய உத்திரங்களுடன் கூடியதாக அமைகிறது. கோயிற்கலைகளில் கருவறைக்கு அடுத்து இடம் பெறும் மண்டபங்கள் அர்த்த மண்டபம், மகா மண்டபம், முக மண்டபம் என வரிசையாகப் பெயர் பெறும். பிற்காலத்தில் இன்னும் பல மண்டபங்கள் பல்வேறு பெயர்களுடன் திருவிழாக்களோடு தொடர்புப்படுத்தித் தோற்றுவிக்கப்பட்டன. அவை கல்யாண மண்டபம், வசந்த மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், பகற்பத்து மண்டபம், இராப்பத்து மண்டபம் என்றவாறு பல பெயர் பெற்றமைந்தன.



# கோயிலின் கட்டடக் கலை

கோயிலின் கட்டடக் கலையைக் காணும் முன்பு அக்கட்டடக் கலையின் ஆரம்ப முறையான பூமி தேர்ந்தெடுத்தல் முறையைப் பற்றிக் காண்போம், கோயில் கட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கின்ற இடத்தில் 1 முழம் அகலம், 1 முழம் ஆழத்திற்கு பூமியைத் தோண்டி மண்ணை எடுக்க வேண்டும். பிறகு தோண்டி எடுத்த மண்ணை அந்தப் பள்ளத்தில் தள்ளி நிரப்ப வேண்டும். அப்பொழுது, தோண்டி எடுத்த மண் மீதமிருந்தால், அந்த பூமியானது உத்தமமான பூமியாகும். குழி நிரப்பி மண் மீதமில்லாமல் சமமாக இருந்தால், அது மத்திமமான பூமியாகும். அந்தக்குழி நிரம்புவதற்குப் போதுமான மண் இல்லாமிருந்தால், அது அதமம் பூமியாகும்.

உத்தமமான பூமியையே, சிறந்ததாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும், மத்திய பூமியானது, மத்திமமாகும். அதம பூமியை ஒதுக்கிவிட வேண்டும். பூமியானது வெண்மை, சிவப்பு, கருப்பு, மஞ்சள் என்று முறையே 4 விதமாகும். இந்த 4 விதமான பூமியும் முறையே 4 ஜாதியினர்க்கும் தகுதியுள்ளதாகும். பிறகு ஏற்றக்காலுக்குச் சிறிதளவு வலது பக்கத்திலிருந்து கொண்டு சிவமந்திரத்தை ஜபித்துக்கொண்டு, கிழக்கு அல்லது வடக்கு முகமாகவே உழ வேண்டும். அவ்விடத்தில் உள்ள புல், பூண்டுகளை எடுத்துவிட்டு அந்த பூமியில் எள்ளு, கடுகு பயிறு, இவைகளை நேந்திரமந்திரத்திலே விதைக்க வேண்டும்.

அந்த தானியங்கள் 3 நாளில் முளைப்பது உத்தமமாகும். 4 நாளில் முளைப்பது மத்தியமம் ஆகும். உத்தமம், மத்தியமம், அதமம் என்பது பூமியின் பண்பைக் குறிக்கின்றது. பிறகு அந்த பூமிக்கு ஒன்று, இரண்டு அல்லது மூன்று நாள் அவ்விடத்தில் பூஜிக்க வேண்டும். இவ்வாறாக பூமி பூஜையை நிறைவு செய்ய வேண்டும். இதைத் தொடர்ந்து திக்பரிச் சேதனம் செய்யப்படும்.

பண்டையக் காலக்கட்டத்தில் கட்டடங்களை அமைக்க ஸ்தபதியர் சிறந்த எளிமையான முறையை வகுத்துள்ளனர். இவற்றைப் பின்பற்றி எவ்வளவு பெரிய கோயிலாக இருப்பினும் எவ்வளவு உயர்ந்த கோயிலாக இருப்பினும் எளிதில் அவர்களால் எழுப்பிவிட முடியும். நாம் சொற்களையும் சொற்றொடர்களையும் அமைக்க எழுத்துக்களை வகுத்து அவற்றை மாற்றித் தொகுப்பதால் எவ்வாறு பல்வேறு சொற்களையும் தொடர்களையும் அமைக்க முடியுமோ அதேபோன்று ஸ்தபதியர் கட்டடங்களை எழுப்ப பல்வேறு ஆதாரப் பகுதிகளை வகுத்துள்ளனர். அவற்றை ஒன்றோடொன்று கூட்டியும், குறைத்தும், இணைத்தும் பல்வேறு விதமான கட்டடங்களை அவர்கள் எழுப்பும் திறன் பெற்றுள்ளனர். 2 சுவர் (அ) பத்திர கால் 3. பிரஸ்தரம் (கூரை), 4. கண்டம் (கழுத்து) (அ) கீரிவம் 5. சிகரம் (தலை) 6.குடம் (ஸ்தூபி) (அ) கலசம் என்பவையாகும். இவ்வங்கங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என மனித உடல் அங்கங்களுக்கு உவமிப்பர்.

## அதிட்டானம்

இது உபானம் முதல் தொடங்கக் கூடிய ஒரு அங்கமாகும். இதுவே மொத்த கோயிலின் கட்டிடத்தைத் தாங்கி நிற்கின்றது. அதிஷ்டானமானது பிரதி (விருதி) பந்தமென்றும், பாத பந்தமென்றும் இரண்டு வகைப்படும்.

(அ) பிரதி (விருதி) பந்தம் எல்லாவற்றிற்கும், குமுதமானது வட்ட வடிவமாக இருக்க வேண்டும்.

(ஆ) பாத பந்ததலமாக (பாதபந்தமாக) இருந்தால், அதில் குமுதமானது வஸ்வ வச்சரமாக (அஷ்டாச்சரமாக) 8 ஆக இருக்க வேண்டும்.

அதிஷ்டானத்தின் உயரத்தை பத்தொன்பது (19) அம்சங்களாகச் செய்து கொள்ள வேண்டும். அவைகளில்

| | | | |
|---|---|---|---|
| உபானம் | 1 அம்சம் | ஆலிங்கம் | 1அம்சம் |
| ஜகதி | 2 அம்சம் | திரிபட்டம் | 1 அம்சம் |
| குமுதம் | 6 அம்சம் | பிரதி (விருதி) | 2 அம்சம் |
| | | வாஜனம் | 1 அம்சம் |
| | | | 19 அம்சம் |



இவ்விதம் கல்விப்பதற்கு பிரதிபந்தம் என்று பெயர். இவைகளில் உபானம் மட்டும் இல்லாமல், மற்றவைகளிருந்தால் அதுவும் முன் போலவே (விருதி பந்தம்) ஆகும். அது, அனேக விதமாக இருப்பதாகும்.

அதே அதிஷ்டானத்தின் உயரத்தை 25 பாகங்களாகச் செய்து கொள்ள வேண்டும். அந்த பாகங்களில்

| | | |
|---|---|---|
| 1. | பாதுகத்தின் உயரம் | 1 அம்சம் |
| 2. | ஜகதியின் உயரம் | 8 அம்சம் |
| 3. | குமுதத்தின் உயரம் | 7 அம்சம் |
| 4. | கம்பத்தின் உயரம் | 1 அம்சம் |
| 5. | களத்தின் உயரம் | 3 அம்சம் |
| 6. | ஊர் த்துவகம்பத்தின் உயரம் | 1 அம்சம் |
| 7. | மஹா பட்டியின் உயரம் | 3 அம்சம் |
| 8. | ஊர்த்துவ கம்பத்தின் உயரம் | 1 அம்சம் |
| | | 25 அம்சம் |

இவ்விதம் இருப்பதற்கு "பாதபந்தம்" என்று பெயர். உபானமில்லாமிருந்தாலும் இதற்கும் "பாதபந்தம்" என்று பெயர் கூறப்படுகிறது. இது பற்பல விதமாகக் கூறப்படுகிறது. இதே இன்று 21 அம்சங்களாகப் பிரிந்து அதற்கு "ப்ரதிபந்தம்" என்னும் 26 அம்சங்களாகப் பிரித்து அதற்கு "அம்போஜகேஸரம்" என்றும் பிரித்து அதற்கு "ஸ்ரீபத்தாந்தம்" (ஸ்ரீபந்தம்) என்று பெயர் கூறப்படுகிறது. இவ்வாறு அதிஷ்டானத்தை வகைப்படுத்தலாம்.

இக்கோயிலின் அதிஷ்டானமானது பாதபந்த அதிஷ்டானமாக அமைக்கப்பட்டுள்ளது. அதில் உபானம், ஜகதி, திரிபட்ட குமுதம், கம்பம் (கம்பு) களத்தி, ஊர்த்துவ கம்பம், மஹா பட்டிகை, வாஜனம் போன்ற பாகங்கள் உள்ளன. பொதுவாக அதிஷ்டானத்தின் கீழ் பகுதியில் உபபீடம் அமைக்கப்படும். இதற்குச் சிறந்த சான்று தஞ்சை பெரிய கோயில், மற்றும் கங்கை கொண்ட சோழபுரம் இத்திருத்தலங்களில் காணலாம். உபபீடம் என்பது கோயில்

உயரத்தை அதிகரிப்பதற்கு அலங்கார அங்கங்களை வைத்து அமைப்பர். இக்கோயிலின் அதிஷ்டானத்தின் கீழ்ப்பகுதியில் உபபீடம் சிறியதாக உள்ளது.

**பித்தி-சுவர் (கால்)**

அதிஷ்டானத்தின் மேல் உள்ள பகுதி "பாதம்" அல்லது சுவர் என்று அழைக்கப்படும். இப்பகுதி வெறும் நெடுஞ்சுவராக இருந்தால் அழகாக இராது. ஆங்காங்கே அரைத்தூண்களும் (Pilaster), கோட்டங்களும் (Devateosta), மகர தோரணங்களும் அமைக்கப்பட்டு அழகுற எடுக்கப்படும்.

ஸ்தாபம் 1, தவிபம் 2, சரம் 3, ஜங்கமம் 4, ஸ்தானு 6, பாதம் 7, இவைகள் பார்யாய பதங்களாகும் (துணைச் சொல்லும்) பதங்களாம். பாதத்தின் உயரமானது கூறப்படுகின்ற உயரத்தின் அம்சத்தினாலே விதிக்கப்படுகிறது. பாதோச்சமானது (உச்சம்-உயரம்) அதிஷ்டானத்திற்குக் கூறப்படுகின்ற உயரத்திற்கு இரண்டு (2) பங்கு இருக்கவேண்டும். அதைக்காட்டிலும் பாததலத்தின் அகலம் எவ்வளவோ அந்த அளவு கூடுதலாக இருப்பதுமாகும் அல்லது பாத உயரத்தில் 6-இல் 1 பாகம் கூடுதலாக இருப்பதாகும்.

இக்கோயிலின் பாதமானது கற்றளியாகத் திகழ்ந்த போதிலும் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் Pilaster எனப்படும் அரைத்தூண்கள் வர்கவரிகளால் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கோஷ்டங்களும் அதில் தெய்வங்களின் திரு உருவங்களும் வைக்கப்பட்டுள்ளது. கருவறை மட்டுமல்லாது அர்த்த மண்டபம், Pillar Mandapa (தூண் மண்டபம்) வரையிலும் பாதப்பகுதி கற்றளியாக உள்ளது. இப்பகுதியில் அழகிய தமிழ் எழுத்துக்களால் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளது.

**பிரஸ்தரம்**

மஞ்சத்தின் மானமானது. ஸ்தம்பத்தின் உயரத்தில் அர்த்தமாகும் அதாவது சரிபாதியளவாகும். அது, ஸ்தம்பத்தில் காணப்படும் உயரத்தின் அம்சமாகும். அதன் ஸ்தம்பத்தின் உயரத்தை இருபத்தோரு (21) பாகங்களாகச் செய்து கொள்ள வேண்டும்.



அவைகளில்

| | | |
|---|---|---|
| 1. | உத்தரம் | 3 அம்சம் |
| 2. | வாஜனம் | 1 அம்சம் |
| 3. | பூதமாலோன்னதம் | 3 அம்சம் |
| 4. | பூதமலைக்கு மேலே வாஜனம் | 1 அம்சம் |
| 5. | கபோதோச்சம் | 7 அம்சம் |
| 6. | ஆலிங்கம் | 1 அம்சம் |
| 7. | அந்தரிதம் | 1 அம்சம் |
| 8. | விருதியின் உயரம் | 3 அம்சம் |
| 9. | வாஜனம் | 1 அம்சம் |
| | | 21 அம்சம் |

இவ்விதம் கல்பிக்க வேண்டும். இதை வேறு விதமாகக் கற்பிப்பதுமாகும்.

உயரத்தை பத்தொன்பது (19) பாகங்களாகச் செய்து கொள்ள வேண்டும்.

அவைகளில்

| | | |
|---|---|---|
| 1. | உத்தரம் | 3 அம்சம் |
| 2. | வாஜனம் | 1 அம்சம் |
| 3. | வலபீ | 3 அம்சம் |
| 4. | வாஜனம் | 1 அம்சம் |
| 5. | கபோதேம் | 6 அம்சம் |
| 6. | ஆலிங்கம் | 1 அம்சம் |
| 7. | அந்தரிதம் | 1 அம்சம் |
| 8. | விருதியின் உயரம் | 2 அம்சம் |
| 9. | வாஜனம் | 1 அம்சம் |
| | | 19 அம்சம் |

பிரஸ்தரத்தின் உயரமானது இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. உத்திரத்திற்கு மேலே இருக்கும் கபோதம், கர்ணபாலி இவைகள் பற்பல விதமான இலைகளினாலேயும், கொடிகளினாலேயும் மகர பந்தங்களினாலேயும், பிரதிஸிம்ஹங்களினாலேயும் அலங்காரம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு பிரஸ்தரத்தின் லஷ்ணம் கூறப்பட்டுள்ளது.

இக்கோயிலின் பிரஸ்தரமானது இவ்வாறே இருப்பினும் உத்திரத்திற்கு மேலேயுள்ள கபோதம், கர்ணபாலி இவைகளை இலைகளினாலேயும், கொடிகளினாலேயும் அலங்கரிக்கப்பட்ட போதிலும் வியாழ (வியாளி) உருவங்களையும் அழகுற வரிசையாக செதுக்கி வடிவமைத்துள்ளனர்.

### கண்டம் (அ) கழுத்து பாகம்

இதுவரையில் கண்ட கட்டடக்கலை கற்றளியாக இருந்தது. இனி வருவது செங்கல்லால் கட்டப்பட்ட கட்டடப்பகுதி ஆகும். கண்டம் என்று கூறக்கூடிய கழுத்துப்பகுதியில் கூடம், (Kuda's) சாலை (Salai) என்ற அமைப்பைக் கொண்டு அழகுற அமைத்துள்ளனர்.

### சிகரம் (Sihara)

இக்கோயிலின் கருவறை சதுரமாக இருந்தாலும் மேலே உள்ள சிகரமானது வேஸரம் என்று கூறக்கூடிய அரைவட்ட வடிவில் உள்ளது. இது செங்கல்லால் கட்டப்பட்டு நன்கு மெருகேத்திப் பூசப்பட்டுள்ளது. சிகரம் முகப்பில் கிழக்கு முகமாக உள்ள தோற்றத்தில் கூடம் போன்ற அமைப்புடன் காணப்படுகிறது.

### கலசம் (Kalasa)

இப்பகுதியானது அனைத்து கோயிலில் காணப்படுவது போன்று 1,3,5,7,9 என்ற வரிசையில் 5 கலசங்களுடன் காட்சியளிக்கிறது. இக்கலசங்கள் செம்பினால் ஆனவை.



# சிவ வழிபாட்டின் தொன்மை

தமிழ் மக்களின் தொன்மை சிவவழிபாடு மிகவும் பழமை வாய்ந்தது. காலத்திற்கு மிகவும் முற்பட்டதாகக் கருதப்பெறும் சிந்துவெளி நாகரிகத்தில் (கி.மு.3000) சிவவழிபாடு தெளிவுறக் காணப்படுகிறது. சிந்துவெளியில் மண்மேடிட்டு மறைந்த நகரங்களாகிய மொகஞ்சதாரோ, ஹரப்பா என்னும் இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சி நிகழ்த்திய சர் ஜான் மார்ஷல், ஈராக் கண்காணியார் முதலிய மேலை நாட்டுப் பேரறிஞர்கள், சிவ வழிபாட்டின் தொன்மையினை உறுதிப்படுத்தியுள்ளனர். நடராசப் பெருமானின் தொல் வடிவம், சிவக்கொழுந்துகளும் (லிங்கம்) சிந்துவெளியில் நிகழ்ந்த புதைபொருள் ஆய்வில் கிடைத்துள்ளன. உலகிலேயே மிகப் பழமை படைத்தும், இன்றளவும் நின்று நிலவுவதும் சிவவழிபாடு என்ற உண்மையினை இவர்தம் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

### சங்க இலக்கியங்களில் சிவன்

சிந்துவெளி நாகரிகக் காலத்திலிருந்து தமிழ் மக்கள் சிவபிரானைப் பரம்பொருளாகப் பரவிய பாங்கினை வரலாறு மெய்ப்பிக்கிறது. சங்கப்பாக்களில் மிகவும் தொன்மையுடையதாகக் கருதப்பெறும் காரிகிழாரின் பாடலில்,

“பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
மக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே” (புறம்-6)

என வரும் பகுதியில், சிவபெருமானின் கோயில் திகழ்ந்த சிறப்பும், அப்பெருமானை வலமாக வந்து வணங்குவதற்காகப் பாண்டியன்

பெருவழுதியின் குடை தாழ்க என்று புலவர் பணிந்த பாங்கும் காணத்தக்கவை. வள்ளல் ஆய் ஆண்டிரன் சிறந்த சிவநேசச் செல்வன். இவன் அரிதிற் பெற்ற கலிங்க ஆடையினை ஆலமர செல்வனுக்கு வழங்கிய பக்திப் பெருக்கினைச் சிறுபாணாற்றுப்படைச் சுட்டுகிறது (96-91). ஔவையார் அமிழ்து வழங்கி அமரரின் சாவை நீக்கிய அப்பெருமானைப் போலவே அருங்கனி வழங்கிச் சாதலை நீக்கிய அதிகமானை நிலைபெற்று விளங்க வாழ்த்தினார். (புறம் : 915-7). முப்புறம் எரித்த சிவபிரானின் முக்கண்ணினையும் போல் முத்தமிழ் வேந்தரும் விளங்கினர் என்றும், அவருள் ஞானக்கண்ணாகிய நெற்றிக்கண் போல் அறிவை வளர்க்கும் பாண்டியன் மேம்பட்டுத் திகழ்ந்தான் என்றும் மதுரை மருதனிளநாகனார் போற்றுகிறார்.

"ஓங்குமலைப் பெருவிற் பாம்புதான் கொளீஇ
ஒருகனை கொண்டு மூவேயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றன்னல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒரு கண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற!" (புறம் 55 : 1-6)

அகநானூற்றில் முக்கட் செல்வனின் ஆலமுற்றம் (181) குறிக்கப்படுகிறது. கலித்தொகையில் இறைவனின் ஆடல்கள் இடம்பெறும். பரிபாடல், திருமுருகாற்றுப்படை முதலிய சங்க நூல்களில் காணப்பெறும் சிவவழிபாடு பற்றிய குறிப்புகள் யாவும் சங்ககாலத் தமிழர்கள் சிறந்த சிவநேயம் பூண்ட செல்வர்கள் என்றும் வாய்மையினை வலியுறுத்தும்.

காப்பியங்கள் எழுந்த காலத்தும் புறச்சமயத்தார் கூட சிவபிரானைப் பக்தியுணர்ச்சியுடன் முதலிடம் நல்கி மதித்துள்ளனர் எனலாம். சிலப்பதிகாரத்தில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" (5 : 169)
"நூதல்வழி, நாட்டத் திறையோன் கோயிலும்" (14 : 7)



என்ற முழுமுதற்கடவுளாக மொழியப் பெற்ற திறம் காண்க. செங்குட்டுவன் சிறந்த சிவபாதசேகரன் என்பதும், அவனால் வெல்லப் பெற்ற ஆரிய அரசர்களும் சிவ வழிபாட்டினர் என்பதும் சிலப்பதிகாரம் அறிவிக்கும் செய்தியாகும். சமண ஆகமங்கள் சிவன், சங்கரன் என்ற பெயர்களால் அருகனைக் குறித்தும், வீடு பேற்றினை சிவகதி என வழங்குதலும் முன்னரே கண்டோம். இதனால், சமணத்திற்கும் முற்பட்ட தொன்மை சைவம் என்பது உறுதி. மணிமேகலையில்,

"நூதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக" (1 : 54 - 5)

என்று சிவபிரானுக்கும் பரத்துவம் நல்கிப் பாடப்பெற்ற சிறப்பு குறிப்பிடத்தக்கது. தாம் வாழ்ந்த காலத்துத் தமிழ் மக்கள் முதலிடம் கொடுத்துப் பரவிய இறைவன் சிவனே என்பதை ஒளிவின்றி உரைத்துள்ள நேர்மையினைக் காண்கிறோம். சாத்தனார் சைவ சமய நுண்பொருள்களைப் பயின்றவர். ஆதலின், சமயக் கணக்கரதம் திறம்கேட்ட காதையில் சைவ வாதம் இடம் பெற்றுள்ளன.

# சிற்பக்கலை

சிற்பக்கலையானது ஆடற்கலைக் கூறுகளைத் தழுவித் தன்வயமாக்கிக் கொண்டு தனக்கேற்ற வழிமுறைகளில் இலக்கணம் அமைத்துக் கொண்டது போல, யோகத்துறை ஆசன அமைதிகளில் ஒரு சிலவற்றையும் ஏற்றுக்கொண்டு அத்துடன் அன்றாட வாழ்க்கையில் காணப்படும் இயல்பான அமைதிகளையும் தேர்ந்து ஒழுங்குபடுத்தித் தொகுத்து இலக்கணமும் வகுத்துக்கொண்டு தனக்கு மேலும் வலிமையும், பொலிவையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

நாட்டியத் தோற்றங்களும், யோகாசனக் கோலங்களும், இயற்கை அமைதிகளும், ஏற்கெனவே நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமாகி இருந்தமையால் இவற்றைத் துணையாகக் கொண்டு மெய்ஞானக் கருத்துக்களுக்குத் தக்க விளக்கமாகப் படிமங்களை இயற்றியுள்ளார்கள். தெரிந்ததைப் புலப்படுத்தித் தெரியாத ஒன்றை விளக்குவதும், அரிய கருத்துக்களை சுய அனுபவங்களை மக்கள் அறியச் செய்வதும், ஒரு கலையின் பொது நோக்கம் பயனுமாகுமன்றோ!

## ஆசனங்கள்

தெய்வப் படிமங்களின் திருக்கோலங்கள் ஆசனங்கள் எனப்படும், அத்தகைய ஆசனங்கள் ஐந்து வகைப்படும். அவை முறையே 1. ஸ்தானகம், 2. ஆசனம், 3. சயனம், 4.ஸ்தானானசம், 5. சயனாசனம் என்பன ஆகும். இவை ஒரு மூர்த்தி தோன்றும் நிலையாகும்.



இவற்றை ஐந்தொழிலென்றும், பஞ்ச கிருத்தியம் என்றும் சிற்ப நூல் கூறும், நின்ற கோலம் ஸ்தானகம் ஆகும். அமர்ந்த கோலம் ஆசனம் ஆகும். கிடந்த கோலம் சயனம் ஆகும். நின்ற கோலத்தைச் சார்ந்த ஸ்தானக அமைதிகள் எல்லாம் ஸ்தானாசனம் ஆகும். கிடந்த கோலத்தைச் சார்ந்த சயன அமைதிகள் அனைத்தும் சயனாசனம் ஆகும்.

"ஆசனம்" என்ற சொல் பொதுவாக அமர்ந்த நிலையையே குறிக்கும் என்றாலும் கலைத்துறையில் "கோலம்" ( தோன்றும் நிலை) என்ற பொருளையும் உணர்த்தும். எனவே, ஸ்தானாசனம், சயனாசனம் என்பவை கலைச்சொற்களாக வழங்கி வருகின்றன. மேலும் ஆசனம் என்பது இருக்கை அல்லது பீடத்தையும் குறிக்கும். இம்மூன்று பொருள்களையும் குறிக்கும் சொல்லை அதனதன் இடத்திற்கேற்பப் பொருள் கொள்ள வேண்டும். கை அமைதிகளை "கை அபிநயங்கள்" என்று சொல்வது போல கால் அமைதிகளான ஆசனங்களைப் "பாத அபிநயம்" என்று கூறலாம்.

### 1. ஸ்தானகம் (சமபாத ஸ்தானகம்) நின்ற நிலை

இது பாதங்களைச் சமமாக வைத்து நிற்கும் நிலை என்று பொருள்படும். தலையையும், உடலையும் நேராக நிமிர்த்தி சமநிலையில் கைகளையும் கால்களையும் நெருங்க அமைத்து, ஒருபாற் கோடாமல் நேர் நோக்குடையதாக அமைக்கப்படும் ஆசன அமைதிக்கு "சமபாத ஸ்தானகம்" என்று பெயர். சந்திரசேகரமூர்த்தி, விஷ்ணு மூர்த்தம் ஆகிய இரண்டும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகள் ஆகும். கைகளில் அவரவர்க்குரிய முத்திரைகளைப் பிடித்து நிற்கும் நிலையும் சமபாத ஸ்தானகம் ஆகும்.

சமபாத ஸ்தானக நிலையில் மேலும் இரு உட்பிரிவுகள் உள்ளன. ஒன்று வைதஸ்திக ஸ்தானகம் என்றும், மற்றொன்று அர்த்த வைதஸ்திக ஸ்தானகமென்றும் உள்ளது. இவற்றின் முக்கிய பங்கு பாதங்களின் பெருவிரல்களின் இடைவெளியை வைத்துக் கூறப்படுகிறது.

### 2. ஆசனம் (அமர்ந்த கோலம்)

ஒரு பீடத்தில் அமர்ந்து ஒரு காலைத் தொங்கவிட்டு மற்றொரு காலை மடித்துப் பீடத்தில் படுக்க வைத்துள்ள கோலத்திற்கு "ஆசனம்" என்று பெயர். "ஆசீனம்" என்றும் கூறுவதுண்டு. இதில் பலதரப்பட்ட ஆசனங்கள் உள்ளன. அவை முறையே சுகாசனம், பத்மாசனம், அர்த்த பத்மாசனம் லலிதாசனம், மகாராஜ லீலாசனம், வீராசனம், உத்குடிகாசனம், யோகாசனம், ஸ்வஸ்திகாசனம், கருடாசனம் என்பவையாகும்.

### 3. சயனம் (கிடந்த நிலை)

கால்களையும், கைகளையும் நீட்டி, உடலையும் தலையையும் பீடத்தில் கிடத்திப் படுத்த நிலைக்கு "சயனம்" என்று பெயர்.

### 4. ஸ்தானாசனங்கள் (நின்ற கோலச் சார்புடைய பிற அமைதிகள்)

ஒரு காலை நிலையாக ஊன்றி மற்றொரு காலை அதற்குக் குறுக்கே வைத்து நிற்கும் அமைதி ஸ்வஸ்திகாசனம் என்று சொல்லப்படும். குழலூதும் கண்ணனின் திருக்கோலத்திலும், ரிஷபாந்திக சிவமூர்த்தத்திலும் கொடிப்பெண் வடிவங்களிலும் இவ்வமைதியைக் காணலாம். அவை முறையே, வைசாக ஸ்தானகம், வைஷ்ணவம், ஆலிடாசனம் பிரத்யாலீடாசனம், ஊர்த்துவ ஜானு, ஏகபாத ஸ்தானகம் என்பனவாகும்.

### 5. சயனாசனம்

ஆசனத்தின் மீது கால்களையும் கைகளையும் நீட்டி, உடலையும் தலையையும் படுக்கையின் மீது கிடத்தி, கண்களை மூடிக்கொண்டு, சம மட்டத்தில் மல்லார்ந்து படுத்த நிலைக்கு "சம சயனம்" என்று பெயர். அவை முறையே, அர்த்த சயனம் (அல்லது) அர்தார்த்த சயனம் என்றும் பொருள்படும்.

### 6. லிங்கம் - சொல் விளக்கம்

"லிங்கம்" என்ற சமஸ்கிருத சொல்லிற்கு அடையாளம், காரணம் தோற்றுவாய், சின்னம், அடிப்படை என்று பலவாறாகப்



பொருள் கொள்ளலாம். இச்சொல் வேத ஆகமங்களில் அதிகமாகக் கூறப்பட்டுள்ளன. பொதுவாக லிங்கம் என்ற சொல்லிற்கு "இறைவன் வெளிப்பட்டு அருள்பாலித்திட மூலகாரணமாக அடையாளச் சின்னமாக திகழ்வது என்பது பல ஆகமங்களின் கூற்றாகும். இதில் சிவபெருமான் வெளிப்பட்டு அருள்பாலிப்பதால் சிவலிங்கம் எனக் கூறப்படுகிறது.

"சிவம்" என்பது கடவுளையும் "லிங்கம்" என்பது அடையாளத்தையும் குறிக்கும். எனவே சிவலிங்கம் என்பதை கடவுளைக் காட்டும் குறி அல்லது அடையாளம் என்று பொருள் கொள்ளலாம். மேலும் "லி" என்பது லயம் என்ற நடுங்குதலையும் "கம்" என்பது தோன்றுதலையும் குறிக்கும். எனவே, ஆன்மாவும், உலகமும் ஒங்குவதற்கும், மீளத் தோன்றுவதற்குமான இடம் என்பதே இதன் பொருளாகும்.

அருவமாகிய இறைவன் மற்றைய உருவங்கள் எல்லாவற்றையும் தோற்றுவிக்கவும், இறுதியில் தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்கும் ஓர் திருவுருவத்தைக் கொள்ள வேண்டியவனா கிறான். அவ்வாறு அவன் கொண்ட அருவமாகிய சதாசிவனே சிவலிங்கமாகும்.

இறைவன் தோன்றிடக் காரணமாயும், அடையாளமாகவும், திகழ்வதற்கு எவ்வாறு லிங்கம் என்னும் சொல் கூறப்படுகிறதோ அவ்வாறு மானுடப்பிறவிகளை எய்தியவர்களின் உயிர்க்கு காரணமாகவும், அடையாளமாகவும், விளங்கும் குறிகளையும் "புல்லிங்கம்" என ஆண்களையும் "ஸ்திரி லிங்கம்" என பெண்களையும் "நபும்சகலிங்கம்" என பசுவின் பாலையும் வடமொழியில் கூறுவர்.

அணு உலக ஆராய்ச்சியாளர்கள் அணுவுக்குள் அணுவை பரிசோதித்துப் பார்த்ததில் பச்சை நிறமான ஓர் வட்டத்தின் நடுவில் செந்நிறம் பொருந்திய ஒரு ஜோதி வடிவம் சிவலிங்கம் என்றும்

உணரத் தலைப்பட்டுள்ளனர். ஆகவே. எல்லா இடங்களிலும் வியாவித்து உலகமெங்கும் இறைவன் நிறைந்திருப்பதை உணர்த்தும் கோலமே சிவலிங்கம் என்று உணரலாம்.

இவற்றில் "ஆவுடையார்" என்பது லிங்கத்தின் அடியில் பீடமாக உள்ள சக்தியைக் குறிக்கின்றது. லிங்கம் ஆவுடையாரிடம் தோன்றி சிவத்தின் உண்மைப் பொருளாகிய பரந்த வெளியைக் குறிக்கிறது. அதாவது பரவெளியாக சிவம் (அல்லது) நாதம், சக்தி அல்லது விந்துவை ஊடுருவி வியாவித்து இருக்கிறது என்பதையும் காட்டுகின்றன. இதனை சக்தி சிவத்துக்கு முன் அடக்கி அதனில் செயல்படுகிறது என்பதாகக் கொள்ளலாம்.

## சிற்ப கலைப்பாணிகள்

தமிழகத்தில் ஆட்சி புரிந்த ஆட்சியாளர்களில் ஒவ்வொரு அரசு பரம்பரையாளருக்கும் அவர்களுக்கெனத் தனித்தனி கலைப்பாணி உண்டு. தமிழகக் கோயில்களில் இடம்பெறும் கலைப்பாணியைப் பொறுத்தவரையில் பல்லவர் கலைப்பாணி, சோழர் கலைப்பாணி, பாண்டியர் கலைப்பாணி, விசயநகர நாயக்கர் கலைப்பாணி எனப் பொதுவாக வகைப்படுத்தி பார்க்கலாம். இவற்றை மேலும் வகைப்படுத்த வேண்டும் எனில் முற்கால பல்லவர் கலைப்பாணி மற்றும் பிற்கால முற்காலச் சோழர் பாணிகள் என்றும், முற்கால மற்றும் பிற்கால பாண்டியர் கலைப்பாணிகள் என்றும், விசயநகர கலைப்பாணி மற்றும் நாயக்கர் கலைப்பாணி என்றும் வகைப்படுத்தலாம். இக்கலைப்பாணிகள் ஒன்றிலிருந்து மற்றொன்று சற்றே வளர்ச்சியடைந்தவை எனக் கொள்ளலாம். பல்லவர் காலமே தமிழகச் சிற்பக்கலையின் துவக்க காலம் என்பதால் அக்கலையின் வளர்ச்சியினைப் பிற அரசபரம்பரையினது ஆட்சிக் காலத்தில் காணமுடிகிறது.

### சோழர் கலைப்பாணி

சோழர்களின் சிற்பங்கள் அழகும், உயிரோட்டமும் கொண்டவையாகும். பல்லவரது சிற்பங்களின் வளர்ச்சியுற்ற நிலையே முற்காலச் சோழன் (Early Chola's) சிற்பங்கள் எனலாம்.



சோழரது சிற்பங்கள் உயரமான மகுடம், மெல்லிய நெடிய உடலமைப்பு, பட்டையான பூணூல் எனப் பல்லவரது சிற்பவமைதியே, சோழரது துவக்ககாலத்தில் பின்பற்றப்பட்டுப் பின்னர் மாற்றமடைந்தது. பல புரிகளைக் கொண்ட பூணூல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ள சிம்மமுக அரைக்கச்சை, கண்ட மாலை என்பவை முற்காலச் சோழரது சிற்பங்களில் காணப்படும் சிறப்புக் கூறுகளாகும்.

பிற்காலச் சோழரது சிற்பங்களில் அணிகலன்களும், அலங்காரங்களும் சற்று அதிகமாக இடம் பெறும். சிற்பங்களின் முகங்கள் வட்டமானதாகவும் உடலமைப்பானது சற்றுத் தடித்தும், குறுகியும் விளங்கும். அரைக்கச்சையில் தெளிவான சிம்மமுக அமைப்பும், ஆடைகளில் வரிகள் அல்லது பூ வேலைப்பாடுகளும், பல புரிகளையுடைய பூணூலும், அலங்காரமான கேயூரமும் கழுத்தணிகளும் காணப்படும். மேலும் உருவமைதிகளின் தலைக்குப்பின் வைக்கப்படும் சிரச்சக்கரத்தில் தாமரை இதழ்கள் வட்டமான பகுதியினுள் அடங்கிக் காணப்படும்.

பிற்காலச் சோழர் காலத்தின் இறுதியில் சிற்பங்களில் காணப்பட்ட மகுடமும், வலது கையின் மேல் பூணூல் படர்ந்து செல்லும் பாணியும் மறைந்தன. முற்காலச் சோழர் கோயில்களில் கருவறையின் தேவகோட்டத்தில் பிரதான இறையுருவம், அதனோடு தொடர்புடைய வேறு சிற்பங்கள் தேவகோட்டத்தின் இருபக்கங்களிலும் இடம் பெற்றிருக்கும்.

### பாண்டியர் கலைப்பாணி

பாண்டியரது சிற்பக்கலைப்பாணியை முற்காலப் பாண்டியர் (சுமார் கி.பி.600-இல் இருந்து 650 வரை) கலைப்பாணியாகவும், பிற்காலப் பாண்டியர் (சுமார் கி.பி. 1200இல் இருந்து 1350 வரை) கலைப்பாணியாகவும் இரு வகைப்படுத்தலாம். முற்காலப் பாண்டியரது கலைப்பாணியில் அமைந்த சிற்பங்கள் சிறு அளவினையுடையதாக இருக்கும். தலையில் இடம் பெறும் மகுடமானது சிறியதாக (கரண்ட மகுடமாக) இடம் பெறும்.

ஆபரணங்கள் குறைவாகக் காணப்படும். முற்காலப் பாண்டியரது கோயில்கள் பெருமளவு சிதைந்துவிட்டபடியால் ஒரு சில கோயில்களே சிதைவடையாது நமக்குக் கிடைக்கின்றன. எனவே, முற்காலப் பாண்டியரது சிற்பங்கள் பெருமளவு உதிரியாகவே ஆங்காங்கே கிடைக்கின்றன.

பிற்காலப் பாண்டியரது சிற்பக்கலைப்பாணியானது முற்காலப் பாண்டியர் கலைப்பாணியிலிருந்து மாறுபட்ட அதே சமயத்தில் வளர்ச்சியடைந்தவையாகக் காணப்படும். பாண்டியர் தம் கோயில்களின் கோட்டங்களில் சிற்பங்களை வைக்கவில்லை. பதிலாக விமானத்தின் மேல் தளங்களிலும், கோபுரங்களிலும் சிற்பங்களை அமைத்தனர். அழகியல் நோக்கில் பாண்டியரது சிற்பங்களை பல்லவர். சோழர் தம் சிற்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம் எனில் இவை சற்று அழகு குறைந்தவையாகும்.

பொதுவாக பாண்டியர்களின் சிற்பங்களை அழகர் மலை, வெட்டுவான் கோயில் மற்றும் பல இடங்களில் காணலாம்.

### விசயநகரர் கலைப்பாணி

விசயநகரர் கலைப்பாணிச் சிற்பங்கள் அளவான உயரத்துடன் அமையும். அவை அதிகமான ஆபரணங்ளும், விசிறி மடிப்பினைக் கொண்ட ஆடை அமைப்புடனும் விளங்கும்.

நாயக்கர் காலச் சிற்பக்கலை அமைப்பானது விசயநகரர் கலைப்பாணியின் சற்றே வளர்ச்சியடைந்த நிலையாகும். அவர்களது காலத்தில் அமைக்கப்பட்ட சிற்பங்கள் மிக உயரத்துடன் காணப்படும். கைவிரல்கள், மற்றும் கால் விரல்களின் நகங்கள் கூர்மையாகக் காட்டப்பட்டிருக்கும்.

இவர்களது கலைப்படைப்புகளில் அக்கால வட்டாரப் பழக்கவழக்கங்களின் தாக்கம் அதிக அளவில் இடம் பெற்றிருக்கும். இவர்களின் சிற்பங்களை காஞ்சிபுரம், ஹம்பி முதலான இடங்களில் காணலாம்.



## சிற்பங்களின் வகைகள்

தமிழ்நாட்டில் சிற்பக்கலைத் தொன்றுதொட்டுச் சிறந்த நிலை வகித்து வந்துள்ளது. மண்ணாலும், மரத்தாலும், தந்தத்தாலும், சுதையாலும் செம்பு முதலிய உலோகங்களாலும், கல்லாலும் செய்யப்பட்ட சிற்பங்கள் ஏராளம் உள்ளன.

### மண் சிற்பங்கள்

மண்ணாலான சிற்பங்கள் தமிழகத்தில் பழங்காலத்தில் மிகவும் போற்றப்பட்டு வந்தது. மண்ணையிட்டு செய்யப்பட்டவை ஆதலின் அவற்றுக்கு மண்ணீடு என்ற பெயர் உண்டு. தமிழ்நாட்டில் நடந்த அகழாய்வில் (Excavation) மண் சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதிகள் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை ஆகியவையாகும்.

### சுதைச் சிற்பங்கள்

மண்ணாலான சிற்பங்களைப் போலவே சுதையால் ஆன சிற்பங்களும் ஏராளம் தமிழகத்தில் உண்டு. சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்கனியின் சாறு, தான்றிக்காய், கடுக்காய் போன்றவற்றை ஊற்றி அரைத்து வஜ்ஜிரம் போல் செய்து அவற்றைக்கொண்டு செய்வது பண்டைய மரபாகும்.

சுதைச்சிற்பங்கள் கிடைத்துள்ள இடங்கள் முறையே காவிரிப்பூம்பட்டினம், திருவதிகை, மதுரை அங்கயற்கண்ணி கோயில் போன்றவையாகும்.

### கற்சிற்பங்கள்

தமிழகத்தில் கி.பி.5-ஆம் 6-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கல்லாலான சிற்பங்கள் ஏதும் இதுகாறும் கிடைக்கவில்லை. ஒரு சில நடுகற்கள் கி.பி. 5, 7- ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் கருதப்படுகின்றன. பிறகு பல்லவர் காலத்திலிருந்துதான் கற்சிற்பங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவற்றை மாமல்லபுரத்திலும், காஞ்சிபுரத்திலும், திருச்சியிலும் காணலாம்.

பல்லவர்களது சிற்பங்கள் போலவே கி.பி. 6, 7, 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட பாண்டிய மன்னர்களும் குகைக் கோயில்களில் சிற்பங்களை அமைத்துள்ளனர். திருமய்யம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் பாண்டியர்களது சிற்பங்களைக் காணலாம். சுமார் கி.பி.950-லிருந்து தஞ்சையை ஆண்ட சோழர்கள் எடுத்துள்ள கோயில்களில் அழகிய சிற்பங்கள் உள்ளன. இவை கி.பி.9,10-ஆம் நூற்றாண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டவை. பெரும்பாலும் சிவாலயங்களில் இன்றும் எஞ்சியுள்ள குடந்தைக் கீழ்க்கோட்டம், ஸ்ரீனிவாச நல்லூர் குரங்குநாதர் கோயில், பசுபதி கோயில் என்னும் புள்ளமங்கை, திருவாதவூர் அறநெற்ச்சுரம் முதலிய கோயில்களில் மிகச்சிறந்த சிற்பங்கள் இருக்கின்றன.

கி.பி. 14, 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட விசயநகரப் பேரரசர்கள் பல சிற்பச் செழுமை வாய்ந்த மண்டபங்களைத் தோற்றுவித்துள்ளனர். இம்மண்டபங்களின் தூண்களில் பல சிற்பங்கள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. சிறப்பாகக் குதிரை மீதும், யாளி மீதும் அமர்ந்து பாய்ந்து வரும் வீரர்களின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. விசயநகர மன்னர்களின் தானைத் தலைவர்களாக வந்த நாயக்கர்கள் மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், கிருஷ்ணாபுரம், திருநெல்வேலி, கும்பகோணம், திருச்சி முதலிய இடங்களிலும் பல சிற்பங்களைத் தோற்றுவித்துள்ளனர். கல்லிலே சிலை வடித்தார்கள் என்பதை

“மண்ணினும் கல்லினும் மரத்திலும் சுவரிலும்
கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க”

என்ற மணிமேகலைப் பாட்டால் அறிய முடிகிறது.

இறைவனது சிற்பம் கல்லில் செய்யப்படுவதற்கு முன்னர் மரத்தில் செய்து சுவற்றில் சாத்தியும், ஓவியமாக வரைந்தும் தொழப்பட்டது என்பதனை,

“அவரவர் தாம் தாம் அறிந்தவாறு ஏத்தி
இவர் இவர் எம்பெருமான் என்று சுவர்மிசைச்
சாத்தியும் வைத்தும் தொழுவர் - உலக அளந்த
மூர்த்தி உருவே முதல்



எனும் பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதிப் பாடல் மூலம் அறிகிறோம். இக்கோயிலில் தற்காலத்து படிமங்கள் இரண்டு உள்ளன.

## தேவகோஷ்ட சிற்பங்கள்

### நிருக்த கணபதி

இவர் அர்த்த மண்டபத்தில் தெற்கே நோக்கியவாறும், நடனமாடிய நிலையிலும் காணப்படுபவர். இவரின் அமைப்பானது யானையின் முகத்தவர், இருகண்களை உடையவர், மஞ்சள் நிறத் திருமேனியோடுக் கூடியவர். ஆறு திருக்கரங்களுடன் காட்சியளிப்பவர். அவரின் வலது கீழ்கரம் முறையே ஒடிந்த தன் கொம்பு, கோடரி, அங்குசம் அதேபோன்று இடது மேற்கரங்கள் முறையே பாசம், அப்பம், இவ்விரண்டையும் தாங்கி அழகு மோதிரங்கள் அணிந்து இருக்கின்ற இடது கீழ் கரத்தை நீட்டி அபிநயம் புரிபவர். தனது இடது திருவடியை தரையில் ஊன்றி வலது திருவடியை சிறிது உயர்த்தி ஒரு காலினால் நடனம் புரிபவர். சற்று வளைந்த ஊன்றிய பாதங்களை உடையவராகவும் காணப்படுவார். பட்டைகளினாலும் அழகுடன் விளங்குபவர். இவரை கற்பக மரத்தின் அடியில் இருப்பவராகத் தியானித்து இருக்கிறது.

### தட்சணாமூர்த்தி

இம்மூர்த்தியானவர் சிவாலயங்களில் கருவறையின் தெற்குப் பக்கத்தில் உள்ள கோட்டத்தில் தெற்கு நோக்கி அமர்ந்தவாறும், சீடர்களுக்கு பாடம் போதிப்பதாக அமைந்திருப்பார். இவரின் தோற்றமானது அழகிய சாந்தமான முகமும், மூன்று கண்களும், நான்கு கரங்களோடும் காட்சியளிப்பவர். இவரின் மேனியானது ஸ்படிகம் போன்ற வெண்மையானதும், செஞ்ஜடாபாரமும் தரித்து அதில் சந்திர பிறை, கபாலம் முதலியவற்றைத் தாங்கி காட்சியளிப்பவர். உடலில் விபூதி பூசி பூணூல் அணிந்தவர். வலது மேற்கரத்தில் ஞான முத்திரையும், இடது கீழ்கரத்தில் புத்தகம் அல்லது சுவடியைக் கொண்டவராகவும் அமைக்கலாம்.

தன் வலது காலைத் தொங்கவிட்டு அபஸ்மாரன் மீது ஊன்றியும், இடது காலை மடக்கி இடப்பாதத்தை வலக்காலின் மீது குறுக்காக வைத்து நிமிர்ந்த உடலுடன் காட்சியளிப்பவர். இந்த ஆசனத்திற்கு "வீராசனம்" அதாவது அமர்ந்த நிலையில் ஒரு காலைப் பிகுவாகத் தொங்கவிட்டு ஊன்றி, மற்றொரு காலை அதன் மீது விரைப்பாகப் படுக்க கிடத்தி நீட்டி உடலை சமநிலையிற் கொண்டு விரைப்பாக நிமிர்த்தி ராஜ நோக்குடன் அமர்ந்திருக்கும் கோலம் வீராசனம் என்று சொல்லப்படும். இந்த நிலையில், உள்ள இம்மூர்த்தியானவர் கைலாய மலை சிகரத்தில் ஆலமரத்தடியில் தெற்கு நோக்கி சனகாதி முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்பவராய் அமர்ந்த நிலையில் அமைத்துள்ளனர்.

## மஹா விஷ்ணு

இம்மூர்த்தியானவர் சிவாலயங்களில் கருவறைக்கு மேற்கே அமைந்த கோஷ்டத்தில் நின்ற நிலையில் காட்சியளிப்பவர். இம்மூர்த்தியின் அமைதியானது முறையே ஒரு முகமும், இரண்டு கண்களும், நான்கு கரங்களும் கொண்டு கம்பீரமாகக் காட்சியளிப்பவர். இவரின் தலையின் மேல் கீரிட மகுடம் அணிந்து காணப்படுவார். விலை மதிக்க முடியாத முத்து, வைரம், பவளம் போன்ற இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்டது கீரிட மகுடமாகும். இம்மூர்த்தியின் வலது, இடது மேற்கரங்கள் முறையே சங்கு, சக்கரம் தாங்கியும், வலது கீழ்க்கரத்தில் அபய முத்திரையையும், இடது கீழ்கரத்தை கடியவலம்பிதமாகவும் அல்லது ஊரு ஹஸ்தமாகக் கொண்டவர். இம்மூர்த்தியானவர் அனைத்து வகையான ஆபரணம் முறையே ஸ்ரீவஸ்தம்,ஹாரம், கேயூரம், கௌஸ்தூகம், தாமரை பூ, இரத்தினங்கள் பல வகை பூக்கள் கொண்ட வனமாலை அல்லது வைதேந்தி வணமாலா, யக்ஞோபவிதம் முதலியவற்றுடன் அழகுடன் கூடியவர். இவரின் மேனியானது கருநீல நிற திருமேனியாகக் காட்சியளிக்கின்றார்.



இம்மூர்த்தியின் உருவத்திற்குப் பதிலாக லிங்கோத்பவ மூர்த்தியின் உருவத்தைப் பிரதிஷ்டை செய்வதும் உண்டு. இம்மூர்த்தியும் மேற்கு நோக்கி அமைத்திருப்பவராக அமைப்பர்.

## பிரம்மா

இம்மூர்த்தியானவர் சிவாலயத்தில் வடக்குப் பகுதியில் உள்ள கோஷ்டத்தில் வடக்கு நோக்கி அமர்ந்த அல்லது நின்ற நிலையில் காணப்படுவார். இம்மூர்த்தியின் அமைதியானது முறையே நான்கு முகமும், நான்கு கரங்களும் தரித்தவராய், வெண்ணிற ஆடைத்தரித்தவரும், பொன்நிற மேனியும் கொண்டவர். தன் வலது மேற்கரத்தில் அக்கமாலையும், இடது மேற்கரத்தில் கமண்டலமும் தரித்தவர். இடது கீழ்கரத்தில் புத்தகம் அல்லது சுவடியும், வலது கீழ்கரத்தில் எழுதுகோல் பிடித்தவாறும் ஜடாமகுடத்துடன் காட்சியளிப்பவர். ஆடை ஆபரணங்கள் அனைத்துடன் பிரகாசமான முகமும், தியான நிலையில் அமர்ந்த அல்லது நின்ற நிலையில் காட்சியளிப்பவராக உள்ளார்.

## துர்க்கை தேவி

தேவியானவர் அர்த்த மண்டபத்தின் வடக்குப் பகுதியில் உள்ள கோட்டத்தில் நின்ற நிலையில் காட்சியளிப்பவள். இத்தேவியின் அமைப்பானது ஒரு முகமும் மூன்று கண்களும் (இரண்டும்) 4 கைகள், பசுமை அல்லது கருமைநிற மேனியும், சாந்தமான தோற்றமும், பீதாம்பரம் ஆகியவற்றை உடையவள். பருத்த தொடை, பிருஷ்ட பாகம், ஸ்தனங்கள் ஆகியவற்றை உடையவளாய் கரண்ட மகுடம் தரித்து சகல ஆபரணங்கள் பூண்டு, தனது வலது கரத்தில் அபயம், இடது கரத்தில் கடக ஹஸ்தம் உடையவளாய் பராஹஸ்தங்களில் வலப்பக்கம் சக்கராயுதம், இடப்பக்கம் சங்கு தரித்து ஸ்தனங்களில் யானைத் தோலால் ஆன, சிவப்பு ரவிக்கையும் அணிந்து பத்ம பீடத்தின் மேல் சமபாதத்துடன் நிற்பவள், இவ்விதமாக துர்க்கையின் லஷ்சணமாக அமைத்துள்ளனர்.

இவள் துர்க்கன் எனும் அரக்கனைக் கொன்றவனாய் இடது கீழ்கரம் ஊரு ஹஸ்தம் அல்லது டமரு எனும் உடுக்கையுடன், கீரிட மகுடம் தரித்து மகிமஸ்தகத்தில் அல்லது எருமையின் தலை மீது நின்ற நிலையில் சைவ, வைணவ ஆலயங்களில் கோஷ்டத்தில் வடக்கு திசை நோக்கி பங்கத்துடன் அமைக்கத்தக்கவள்.

ஒரு முகம், நான்கு கரங்களும், கருமை நிற மேனியும், கீரிட மகுடம், கரங்கள் முறையே சங்கு, சக்கரம், அபயம், ஊரு ஹஸ்தம் தாங்கி மகிஷத்தின் மீதுள்ள துர்க்கை சிவதுர்க்கை எனக் குறிப்பிடப்படுகிறது.

**சண்டிகேஸ்வரர்**

இம்மூர்த்தியானவர் அழகாகவும், அமைதியாகவும், தெளிந்த முகமும், இரண்டு கைகளும், இரண்டு கால்களும், செந்நிற மேனியும் அல்லது பொன்னிற மேனியும் உடையவராய். ஜடா மகுடம் உடையவராய் வெண்ணிற ஆடை உடுத்தியவர். திருநீறு பூசிய திருமேனியோடு காட்சியளிப்பவர். பத்ர பீடத்தின் மீது இடது காலை தொங்கவிட்டு வலது காலை மடக்கி அமர்ந்தவரும். வலது கரத்தில் கோடரி பிடித்து, இடது கரத்தை தொடை மீது வைத்திருப்பவராய், எப்பொழுதும் சிவனின் திருவடியை தியானித்துக் காட்சியளிக்கிறார். சிவன் கோயில் கருவறையில் வடகிழக்குப்பகுதியில் தெற்கு நோக்கி அமர்ந்துள்ளார். சண்டிகேஸ்வரர் பரமேஸ்வரரின் பக்தர் அவரை தரிசிக்காமல் சிவ தரிசன பலன் கிடைக்காது. அதற்காக கடைசியில் அவரை தரிசித்து விட்டு வெளியே வர வேண்டும், அவருடைய காது மந்தம் என்பதால் கை தட்டி நமஸ்கரிக்க வேண்டுமென்பது மரபு ஆகும். இவரை உத்தம பஞ்சதாளம் உயரம் உள்ளவாறும் குழந்தைக்குரிய ஆபரணங்களில் அமைந்துள்ளனர்.



# கல்வெட்டுகள்

**க.ஆ.அ. எண் : 361/1911**

இடம் : திருவானைக்கோயில் (பொன்விளைந்த களத்தூர்) (செங்கை) திருவாலீசுவரர் கோயில் மகாமண்டப வடசுவர்.

மன்னன் : முதலாம் இராசநாராயணன்

ஆட்சி ஆண்டு : 3-வது கி.பி. 1340 ஆவணி மாதம்

1. ஸ்வஸ்திஶ்ரீ சகலலோகச் சக்ரவத்தி ஶ்ரீஇராசனா ராயணன் சம்புவராயர்க்கு யாண்டு ௩-வது
2. ஆவணி மாதம் ஜயங்கொண்ட சோழமண்டலத்து களத்தூர் கோட்டத்து களத்தூர் நாட்டு களத்தூரி
3. ல் உடையார் திருவாலக்கோயில் லுடைய நாயனார் கோயில் கைக் கோளரில் அம்பலவர் வேணாவுடை
4. யார் தேவாண்டை இந்னாயனார்க்கு னான் வைத்த திருநந்தா விளக்கு அரைக்கு நான் விட்ட
5. பசு பதினஞ்சும் இக் கோயில் திருவிளக்குக் குடி மன்றாடி தளியக் கோன் மகன் எழும்போதக் கோனேன் இந்த பசு
6. பதின் ஐந்சும் இன்னாள் முதல் கைக் கொண்டு சந்த்ராதித்தவரை நாள் ஒன்றுக்கு இராசகேசரி நாழியால் ஆழாக்கு
7. நெய் அளக்க கடவேன் தளியக் கோன் எழும் போதக் கோனேன் இது ஶ்ரீமாஹேஸ்வர ரக்ஷை.

**க.ஆ.அ. எண் : 362/1911**

இடம் : திருவானைக்கோயில் (பொன்விளைந்த களத்தூர்) (செங்கை) திருவாலீசுவரர் கோயில் மகாமண்டப வடசுவர்.

மன்னன் : முதலாம் இராசநாராயணன்

ஆட்சி ஆண்டு : 10-வது கி.பி. 1347 வைகாசி மாதம்

1. ஸ்வஸ்திஶ்ரீ இராசனாராயணன் சம்புவராயற்கு யாண்டு ய வது வைகாசி
2. மீ ய௲ தியதி களத்தூர் கோட்டத்து களத்தூர் நாட்டு களத்தூரில் உடையார் திரு
3. வாலக்கோயிலுடைய னாயனார் கோயில் கைக் கோளரில் அம்பல வேணாவுடை
4. ய்யான் தேவாண்டை காங்கயராயனுக்கு களத்தூர் பற்று நாட்டாரோம்
5. இவர் களத்தூர் ஊரவர் பக்கல் காணி ஆக கொண்டு உடைய களத்தூர் பிடா
6. கையில் நரியன் சேரியான புண்டரீக நல்லூர் இவர்க்கு சந்த்ராதித்தவரையும்
7. ஸர்வமாந்ய இறையிலி ஆக குடுத்தோம் இவ்வூர் தரப்படி பொன் பதின்மூன்

**க.ஆ.அ. எண் : 364/1911**

இடம் : திருவானைக்கோயில் (பொன்விளைந்த களத்தூர்) (செங்கை) திருவாலீசுவரர் கோயில் மகாமண்டப கிழக்குச் சுவர்.

மன்னன் : முதலாம் இராசநாராயணன்

ஆட்சி ஆண்டு : 12-வது கி.பி. 1349

1. ஸ்வஸ்திஶ்ரீ சகலலோகச் சக்கரவத்திகள் ஶ்ரீ இராசநாராயணன் சம்புவராயற்
2. க்கு யாண்டு யஉ வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்



3. து களத்தூர் திருவாலக் கோயில் உடைய னாயனார் கோயில் தாநத்தாற்க்குத் திருவா
4. லக் கோயில் உடைய நாயனார் திருமடைவிளாகமும் திருவிருப்பு சூழ்ந்த திருநாமத்தியிலி காணி
5. நாற்பற் கெ(ா)ல்லைக்கு உள்ளிட்ட நஞ்சை புஞ்சை புறகலனையும் மற்றும் பலபட்டடையும் ஏறும் குடி
6. யும் ஸர்வமானியம் ஆகவும் சன்திராதித்தை வரை ஆக பூசை திருப்பணி தாழ்வற நடக்கும்படி
7. யாக குடுத்தோம் இப்படி செய்வதே உ

**க.ஆ.அ. எண் : 354/1911**

இடம் : திருவானைக்கோயில் (பொன்விளைந்த களத்தூர்) (செங்கை) திருவாலீசுவரர் கோயில் மகாமண்டபத் தென்சுவர்-முப்பட்டைக் குமுதம்

மன்னன் : முதலாம் இராசநாராயணன்

ஆட்சி ஆண்டு : 12-வது கி.பி. 1341

1. ஸ்வஸ்திஶ்ரீ இராசநாராயணன் சம்புவராயற்க்கு மூன்றாவது களத்தூர் கோட்டத்து களத்தூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார்க்கு சுரபியாக
2. மல்லிநாதன் இராசநாராயணன் சம்புவராயனேன் மல்லன் மகன் எழும்போதகோன் வசமாக விட்ட பசு பதினஞ்சும் சந்த்ராதித்த வரை செலு
3. த்த கடவது ஆக கைக்கொண்டேன் மல்லன் மகன் எழும்போதகோனேன்

# கோயில் கல்வெட்டுச் செய்திகள்

**கல்வெட்டு எண் : 284**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : சுந்தர பாண்டியன்

செய்தி : இக்கல்வெட்டில் கைக்கோளர் மற்றும் நாட்டியப் பெண்களுக்கு நிலங்களைத் தானமாக வித்தூர் என்ற ஊரில் கொடுத்துள்ளனர். இப்பகுதி தெற்கு பகுதியான மதுராந்தக சதுர்வேதி மங்கலத்தில் அடங்கியுள்ளது. பிறகு இப்பகுதி தனியாட்சியாகச் செயல்பட்டது என்பது தெரிகிறது.

**கல்வெட்டு எண் : 285**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : இக்கல்வெட்டில் களத்தூர் கோட்டத்து வித்தூர் என்ற ஊரில் இக்கோயிலுக்காக நிலத்தைத் தானமாகக் கொடுத்துள்ளார்.

**கல்வெட்டு எண் : 286**

இடம் : கோயிலின் வடக்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : இக்கல்வெட்டில் வித்தூரில் உள்ள கோயிலுக்குச் சொந்தமான வீதிகளில் உள்ள கடைகளில் வரி வசூல் செய்யப்பட்டதையும், அவ்வரியை கோயிலின் விழாக்களுக்கும், வழி பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டது என்பதை விளக்குகிறது.



**கல்வெட்டு எண் : 287**

இடம் : கோயிலின் வடக்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : இக்கல்வெட்டில் இக்கோயிலின் வளர்ச்சி மற்றும் திருவிழாக்களுக்குப் பயன்படும் பொருட்டு மூன்று வேலி நிலத்தைத் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறுகிறது.

**கல்வெட்டு எண் : 288**

இடம் : கோயிலின் வடக்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : திருவேங்கடநாதன் என்பவன் நாச்சன் மான்யம் என்ற நிலத்திலிருந்து திருவாலயப்பன் கோயிலுக்கு நிலக்கொடை அமைத்துள்ளான். இந்த நிலக்கொடை வீரப்பன் நாயக்கர் என்பவரின் நன்மைக்காக அளிக்கப்பட்டது.

**கல்வெட்டு எண் : 289**

இடம் : கோயிலின் வடக்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : இக்கல்வெட்டில் கோயிலில் நடனம் புரிகின்ற பெண்களுக்கு வீடும் நிலங்களும் கொடுப்பதுடன், இறைவனுக்குப் பணிபுரிய சேவகர்களை நியமிக்கவும் பயன்படுத்தியுள்ளனர்.

**கல்வெட்டு எண் : 290**

இடம் : கோயிலின் வடக்குப் பக்கச் சுவர்

அரசர் : சுந்தரபாண்டியன்

செய்தி : இக்கல்வெட்டில் புஷ்பகிரி ஐயர் என்பவர் விளக்கு எரிக்க ஆறு பசுமாடுகளைத் தானமாகக் கொடுத்தார் என்பதைக் கூறுகிறது.

**கல்வெட்டு எண் : 291**

இடம் : அர்த்த மண்டப மேற்குப் பக்கச் சுவர்

அரசர் : சுந்தரபாண்டியன்

செய்தி : இக்கல்வெட்டில் திம்மராயர் என்பவர் மலையப்பன் என்பவரின் நன்மைக்காக இந்த மண்டபத்தைக் கட்டினான் என்பதைக் கூறுகிறது.

**கல்வெட்டு எண் : 292**

இடம் : அர்த்த மண்டப மேற்குப் பக்கச் சுவர்

அரசர் : சுந்தரபாண்டியன்

செய்தி : இக்கல்வெட்டில் நாரணபுத்தைச் சேர்ந்த ராமராசய்யன் என்பவரின் மகன் திம்மராயன் நாட்டிய மகள் ஒருத்திக்கு நிலத்தையும் மனையையும், கொடையாகக் கொடுத்துள்ளான். இந்தக் கொடை திருவாலக்கோயிலில் நடைபெறுகின்ற சடங்குகளில் அவள் பணியாற்ற வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்டது.

**கல்வெட்டு எண் : 352**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : இராஜராஜன்

செய்தி : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தைச் சேர்ந்த வெங்குன்ற கோட்டத்துக்கு சேர்ந்த பாரசிவன் தழுவகுழைந்தவன் என்பவன் இதே மண்டலத்து களத்தூர் கோட்டத்து திரு ஆலக்கோயில் மகாதேவற்கு விளக்கு கொடை அளித்தார். இக்கல்வெட்டில் காலமுகா முனிவர்களைப் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன.

**கல்வெட்டு எண் : 353**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : விருப்பண்ண உடையார் (விசய நகர மன்னன்)

செய்தி : திருவாலக்கோயில் மகாதேவற்கு உத்தம சோழ விளாகம் என்ற ஊரிலிருந்து நிலங்கள் கொடுத்துள்ளனர். உத்தம சோழ விளாகம் என்பது பெரும்பாலும் சோழர் காலத்தில் உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். ஆனால் அதில் ஏற்பட்ட அழிவு நீக்கி புதுப்பித்து வீரகப்பண்ணன் அளிக்கின்றான் என்பதை இக்கல்வெட்டு கூறுகிறது. மேலும் புண்டரீக இராஜேந்திர சோழன் என்பவன் குறிப்பிடப்படுகின்றான்.

**கல்வெட்டு எண் : 354**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன் (மல்லிகநாதன்)

செய்தி : மல்லிநாத இராசநாராயணன் என்பவன் இக்கோயிலுக்கு பதினைந்து (15) பசுக்களைத் தானமாகக் கொடுத்துள்ளான்.



**கல்வெட்டு எண் : 355**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : இராஜராஜன்

செய்தி : இக்கல்வெட்டில் திருமயிலையைச் சேர்ந்த (மயிலாப்பூர்) வணிகன் ஒருவன் விளக்கையும், விளக்குத் தூணையும் தானமாக அளித்துள்ளான் என்பதைத் தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு எண் : 356**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : புக்கண்ண உடையார் (விசய நகர மன்னன்)

செய்தி : கைக்கோளர் மரபைச் சேர்ந்த வேணாவுடையான் என்பவன் புதுப்பாக்கம் என்ற ஊரில் நிலத்தை வழங்கியுள்ளான் என்பதை இக்கல்வெட்டு கூறுகிறது.

**கல்வெட்டு எண் : 357**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : குலோத்துங்க சோழன்

செய்தி : ஊற்றுக்காட்டு கோட்டத்து ஆரூரைச் சேர்ந்தவன் நான்கு பசுவை விளக்கு எரிக்கக் கொடுத்துள்ளான். இக்கல்வெட்டில் காலமுகா முனிவர்களைப் பற்றி குறிப்புகள் உள்ளது.

**கல்வெட்டு எண் : 358**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : விக்ரம சோழன்

செய்தி : செம்பூர் கோட்டத்தைச் சேர்ந்த சிரதண்டலம் என்ற ஊரிலிருந்து நிலக்கொடை அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலக்கொடையை அளித்தவர் பலராவர். அவர்களில் ஒருவர் செம்பூர் கோட்டத்து பட்டின நாட்டு கோவூரைச் சேர்ந்தவர், மற்றொருவர் பட்டினம் என்ற ஊரைச் சேர்ந்தவர்.

**கல்வெட்டு எண் : 359**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : கொனேரி மேல் கொண்டான்

செய்தி : இக்கல்வெட்டு ஓர் அரசனின் ஆணை. இக்கல்வெட்டின்படி உள்ளாவூர் ஆன ராஜநல்லூரின் பகுதியான அரும்பாக்கத்தில் உள்ள நிலங்களை அரசன் தேவதானமாக

அளித்துள்ளான். இந்த தேவதானத்திற்கு அனபாய நல்லூர் என்று பெயரிட்டுள்ளான். இந்நிலக்கொடை கோயிலில் நடைபெறும் அமுதுபடிக்கும், வழிபாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆணையில் கையெழுத்திட்ட அதிகாரி அனபாய மூவேந்த வேளான் ஆவான்.

**கல்வெட்டு எண் : 360**

இடம் : கோயிலின் தெற்குப் பக்கச் சுவர்

அரசர் : விக்ரம சோழன்

செய்தி : கோமடத்து பண்டிதன் விளக்குக்கொடை அளித்துள்ளான்.

**கல்வெட்டு எண் : 361**

இடம் : கோயிலின் வடக்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்த : களத்தூரின் கீழ்பகுதியான புண்டரீக நல்லூரில் வாழ்பவன் இவன் கைக்கோளர்க்கு நிலக்கொடை அளித்துள்ளான்.

**கல்வெட்டு எண் : 362**

இடம் : கோயிலின் வடக்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : கைக்கோளர் மரபைச் சேர்ந்தவன் இக்கோயிலுக்கு விளக்கு ஏற்ற (15) பசுமாடுகளைத் தானமாகக் கொடுத்துள்ளான்.

**கல்வெட்டு எண் : 363**

இடம் : கோயிலின் வடக்குப் பக்கச்சுவர்

அரசர் : கொனேரி மேல் கொண்டான்

செய்தி : இக்கல்வெட்டும் ஒரு அரசனின் ஆணை. இவ்வாணையின் படி தொண்டைமான் என்பவனுக்கு நெம்மேலி என்ற ஊரில் நிலக்கொடை அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஊரை திருநீற்று சோழ நல்லூர் என்று அழைத்தனர். இந்த ஆணையைக் கையெழுத்திட்டவன் அனபாய சோழ மூவேந்த வேளான் என்பவனாவான்.



**கல்வெட்டு எண் : 364**

இடம் : கோயிலின் கிழக்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : திருமடைவிளாகத்தையும், சுற்றியுள்ள நிலத்தையும் கோயில் தானத்தாருக்கு சர்வமான்யமாக அளித்த செய்தி கூறப்படுகிறது.

**கல்வெட்டு எண் : 365**

இடம் : கோயிலின் கிழக்குப் பக்கச் சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : ஆலக்கோயிலுக்கு வடக்கேயுள்ள மலைமேல் விளக்கு ஏற்றுவதற்கு கரிகால சோழ தமிழ்த்தரையன் என்பவன் நிலக்கொடை அளித்துள்ளான்

**கல்வெட்டு எண் : 71**

இடம் : கோயிலின் மண்டபத்தில் கிழக்கு பக்கச்சுவர்

அரசர் : இராசநாராயணன்

செய்தி : காங்கேய பல்லவத்திதரையன் என்பவனால் நிலக்கொடை அளிக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. இந்த கொடை அவரின் மகளின் நன்மைக்காக அளிக்கப்பட்டது.

**கல்வெட்டு எண் : 71**

இடம் : கோயிலின் கிழக்கு வடக்குப் பக்கச் சுவர்

அரசர் : விருப்பண்ண உடையார்

செய்தி : வீரகப்பண்ணவுடையார் காலத்தில் இக்கோயிலுக்குத் தேவையான சில பணிகளைப் பூர்த்தி செய்துள்ளனர். பங்குனி மாதத்திலிருந்து இது செயல்படுத்தப் பட்டுள்ளது.

# அரசியல்

செங்கை மாவட்டத்தின் இன்றைய நிலையை நோக்குமுன்பு வரலாற்று அடிப்படையில் எவரெவரின் ஆட்சிகளெல்லாம் இம்மாவட்டம் உள்ளடங்கிய தொண்டை நாட்டில் நடைபெற்றுள்ளது என்பதைக் காண வேண்டியது அவசியமாகிறது. அப்போதுதான் எவரெவரின் ஆட்சிக்காலத்தில் எந்தெந்த ஊர்கள் இங்கு தோன்றியுள்ளன என்பதை உணரமுடியும்.

## தொண்டை நாட்டில் பல்வேறு ஆட்சிகள்

தொண்டை மண்டலம் உருவாவதற்குக் காரணமாகச் சோழர்கள் விளங்கினாலும் இந்நாடு பலவற்றாலும் சிறந்து விளங்கக் காரணமாக இருந்தவர்கள் பல்லவர்களேயாவர். இவர்களது ஆட்சிக் காலத்தின் போது கட்டடம், சிற்பம், ஓவியம் போன்ற அருங்கலைகள் சிறந்து விளங்கின. ஏற்கெனவே உள்ள நகர்களிலும், ஊர்களிலும் தமது கலைச் சிறப்பைக் காட்டியதுடன், தமது கலையாற்றலை வெளிப்படுத்துவதற்காகவே பல புதிய ஊர்களையும் பல்லவர்கள் உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 574-இல் சிம்மவிஷ்ணு என்ற பல்லவப் பேரரசனால் தோற்றுவிக்கப்பட்ட பல்லவர் ஆட்சி கி.பி. 880 வரை சிறப்பாக நடைபெற்றுள்ளது, ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் பல்லவர் ஆட்சி இப்பகுதியில் நடைபெற்றுள்ளதால் அப்பேரரசை நினைவூட்டுமாறு பல ஊர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் இன்றும் காட்சி தருகின்றன.

பல்லவர்களது ஆட்சிக்காலத்தில் சமணம், பௌத்தம் ஆகிய இருபுறச் சமயங்களும் தொண்டை நாட்டில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. சில பல்லவ மன்னர்களே சமண சமயத்தினராகி, அச்சமயம் வளர்ச்சியடைய அரும்பணியாற்றியுள்ளனர் என்றும்



வரலாறு எடுத்துக்காட்டுகிறது. அவ்வடிப்படையில் சமண, பௌத்த, சமயப் பெயர்களை உணர்த்துமாறு இப்பகுதியில் இடம் பெற்றுள்ள ஊர்களும் பல்லவர்களது ஆட்சிக்காலத்தில் தோன்றியவைகளேயாகும்.

## சோழர் ஆட்சி

காட்டுப்பகுதியாகக் கிடந்த தொண்டை நாட்டைச் சீர் செய்து, நாடு நகரங்களை ஆக்கிய பெருமை சோழ அரசர்களையே சேரும். “தொண்டை நாட்டுக் காட்டின் செழுமையையும், கடலின் கொழுமையையும் கண்டு, சோழர்கள் சிலகாலம் இப்பகுதியை ஆண்டனர்” என்று கூறப்படுகிறது. 24 கோட்டங்களாகத் தொண்டை நாட்டைப் பிரித்தவர்களும் சோழ அரசர்களேயாம். கோட்டங்கள் பிரிக்கப்பட்ட காலத்தில் பல பகுதிகள் காடுகளாகவே இருந்துள்ளன என்பதை, சில கோட்டங்களின் பெயர்களே காடுகளாக உள்ளதிலிருந்து உணர முடிகிறது.

இருவேறு காலக்கட்டங்களில் சோழர் ஆட்சி தொண்டை நாட்டில் நடைபெற்றுள்ளது. தொண்டைமான் இளந்திரையன் சங்க காலச் சோழர் மரபைச் சேர்ந்தவன். எனவே, சங்க காலத்திலேயே இப்பகுதியைச் சோழர்கள் ஆண்டுள்ளனர் என்று தெரியவருகிறது. அதன் பிறகு ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களால் இப்பகுதி களப்பிரர்களாலும் சில காலம் ஆளப்பட்டுள்ளது. பின்பு களப்பிரரையும் வென்று சிம்மவிஷ்ணு என்ற பல்லவ மன்னன் பல்லவப் பேரரசை இப்பகுதியில் நிறுவினான்.

அபராஜிதன் என்ற பல்லவ மன்னனை ஆதித்த சோழன் என்ற பிற்காலச் சோழர் மரபைச் சேர்ந்த அரசன் கொன்று மீண்டும் தொண்டை நாட்டில் சோழப் பேரரசை நிறுவினான். கி.பி.9-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ 400 ஆண்டுகள் இப்பகுதியில் பிற்காலச் சோழர் ஆட்சி நடைபெற்றுள்ளது.

சங்ககாலச் சோழர் இப்பகுதியை ஆட்சி செய்த காலம் குறைவு. மேலும் காடாகக் கிடந்த பகுதியை நாடாக மாற்றுவதற்கே அவர்களது ஆட்சிக்காலத்தில் பெரும்பகுதியைச் செலவிட வேண்டியிருந்திருக்கும். அன்றியும், அப்போது தோன்றிய ஊர்கள் பெரும்பாலும், சங்ககால அமைப்பில் இயற்கைத் தாவரம், நிலம்

முதலியவற்றின் பெயர்களையே பெற்று அமைந்திருக்கும். எனவே. பிற்காலச் சோழர் காலத்திலேயே சோழர்களது பெயர்களைப் பெற்றுப் பல ஊர்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன என்பது பெருமைக்குரியது.

## விக்கிரம சோழன்

முதல் குலோத்துங்கன் மகன் விக்கிரமன், சோழப் பேரரசின் ஒரு பகுதியாகிய வேங்கை நாட்டின் பொறுப்பை ஏற்றிருந்தான். ஆட்சித் திறமையுடையவனதாலின் சோழ நாட்டின் இளவரசனாகப் பட்டம் சூட்டப் பெற்றான். முறைப்படி பரகேசரி என்னும் பட்டம் பெற்றவன்.

"பெரிய திருநாள் பெரும்பெயர் விழாவெனும்

உயர்பூரட் டாதி உத்திரட் டாதியில்"

என்னும் இம்மெய்க்கீர்த்தி அடிகள் இவனது பிறந்த நட்சத்திரத்தை உணர்த்துகின்றன.

மூன்று வகையான மெய்க்கீர்த்திகள் இவனுக்கு உரியனவாகக் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று "பூமாலை மிடைந்து பொன் மாலை திகழ்தர" என்று தொடங்குகிறது. மற்றொன்று "பூமாது புணரப் புவிமாது வளர" என்ற தொடக்க அடியினை உடையது. 'கோக்கவி மூர்க்க' என்று தொடங்கும் சிறிய அளவிலானது ஒன்று.

## மெய்க்கீர்த்திகள்

எல்லா வகையான செல்வமும் கல்வியும் நிரம்பப் பெற்றிருந்த விக்கிரம சோழன் நாட்டில் எவ்விதத் துன்பமும் இல்லாதவாறு ஆட்சி செய்தான்.

இளமைப்பருவத்திலேயே காகுளம் என்னுமிடத்தில் தெலுங்க வீமனை வென்று வேங்கை நாட்டை ஆண்டு வந்தான். தந்தை குலோத்துங்கனின் அழைப்பின் பேரில் சோழநாடு வந்து இளவரசனானான். தந்தைக்குப்பின் சோழப் பேரரசனானான். போர் அதிகமில்லாமல் அமைதியான ஆட்சியை நடத்தினான். அவன் ஆட்சியில் துன்பம் நீங்கியது. குறை ஏதும் இல்லாதாயிற்று. குறுநில



மன்னர் செலுத்திய திறைப்பொருள்கள் குவிந்தன. அதனால் தில்லைத் திருச்சிற்றம்பல தேவருடைய பொன்னம்பலத்தைச் சுற்றிலும் அமைந்த திருமாளிகை, கூடசாலை, பலிபீடம் போன்றவை பொன்னால் வேயப்பட்டன. மன்னவன் தன் பிறந்த நாளில் பெரிய திருவிழா நடத்த ஏற்பாடு செய்தான். அவ்விழாவில் தேர்த்திருவிழா ஒன்றும் நடைபெறச் செய்தான். பொன் பரிச்சின்னங்கள் பலவற்றை ஆலயத்தில் வைக்க ஏற்பாடு செய்தான்.

முக்கோக்கிழானடிகள், திரிபுவனமுடையாள், தரணி முழுதுடையாள் என்னும் மூன்று தேவியருள் முக்கோக்கிழானடிகளே அவனுடைய பட்டத்தரசியாக விளங்கினாள்.

தந்தையின் கட்டளைப்படி சோழப் பேரரசின் மன்னனானான் விக்கிரம சோழன். கலிங்கப் போரில் வெற்றிமாலை சூடிய மன்னன். சூரிய, சந்திரர் உள்ளவரை தன் புகழ் நிலைபெறுமாறு நல்லாட்சியினை நடத்திய சோழன் முக்கோக்கிழானடிகள் என்னும் தேவியைப் பட்டத்தரசியாகக் கொண்டு அரசு வீற்றிருந்தான்.

நாட்டை வளம்படுத்திய விக்கிரம சோழன், குடிகளைப் பாதுகாப்பதில் குழந்தைக்குத் தாய்போல விளங்கினான்.

வடதிசை வாகை சூடி வேங்கை நாட்டை ஆண்ட விக்கிரம சோழன், தந்தை இறந்த பின் சோழ நாட்டின் முடியினை ஏற்றான். அவன் ஆட்சியில் போர் அதிகம் இல்லாமையால் தருமம், தானம், தவம் ஆகியவை தழைத்தன. மனு ஆண்ட பழைய காலம் போல வேதமும் மெய்மையும் சிறந்து விளங்கின. புலிக்கொடியுடைய சோழ மன்னனின் ஆணையை மன்னர் பலரும் ஏற்று நடந்தனர். நாட்டில் உயிர்களுக்கெல்லாம் தாயைப் போல இருந்து தனித்தனியே ஒவ்வொரு உயிரின் நலனையும் கவனித்து உலகமே மகிழுமாறு வழி செய்தான். குறை கூற விரும்புவோர் ஒலிக்கும் மணி ஒலி அவனது அவையில் ஒலிக்காமல் ஒடுங்கிவிட்டது. அரண்மனை வாயிலில் வெற்றிக் கொடியும், புகழ்ச் சின்னங்களும் விளங்கின. இவ்வாறு மாநிலம் காவல் புரிந்தான்.

விக்கிரமன் பட்டம் ஏற்ற பத்தாமாண்டு பொன் ஏட்டில் பொறிக்க வேண்டிய சிறப்பினைப் பெற்றது. அவனது ஆட்சியில் குறுநில மன்னர் செலுத்திய திறைப் பொருள்கள் பெரும் பொற்குவியலாக

அமைந்தன. அவற்றைக் கொண்டு தங்கள் குலநாயகனாக விளங்கும் தில்லைச் சிற்றம்பலமுடைய தேவருக்குப் பல தொண்டுகளைச் செய்தான். அவற்றுள் இறைவன் திருநடம் புரியும் பொன்னம்பலத்தைச் சுற்றி எடுக்கப் பெற்றிருந்த திருமாளிகையும், கோபுர வாயிலில் அமைந்த கூட சாலைகளும். சிறந்த பலிபீடமும் ஆகிய இவை யாவும் பொன்னால் வேயப் பெற்ற செயல் மிகச் சிறப்புடையதாகும்.

**மூன்றாம் குலோத்துங்கன்**

இரண்டாம் இராசராசன் மகன் மூன்றாம் குலோத்துங்கன், இவன் இரண்டாம் இராசாதிராசனுக்குப் பின்பு சோழப்பேரரசின் முடியை ஏற்றான். தந்தை இறந்தபோது இவன் இளையவனாக இருந்ததால், இரண்டாம் இராசராசன் தன் பாட்டனாகிய விக்கிரம சோழனின் மகள் வயிற்றுப் பேரனை வரவழைத்து இளவரசுப்பட்டம் கட்டினான். அவனே பிறகு இரண்டாம் இராசாதிராசன் என்ற பட்டப்பெயருடன் சோணாட்டை ஆண்டான். அவனுக்குப் பிறகே மூன்றாம் குலோத்துங்கன் அரசு கட்டில் ஏறும் வாய்ப்பினைப் பெற்றான்.

மூன்றாம் குலோத்துங்கனுக்குரியவனாக நான்கு மெய்க்கீர்த்திகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. அவை முறையே

1. புயல்வாய்த்து வளம் பெருகப் பொய்யாத நான்மறையின்
2. இதே தொடக்க அடி-பிற வேறுபாடு
3. புயல்வாய்த்து மண்வளரப் புலியானையும் சக்கரமும்
4. திருவாய்க் கேழ்விமுன் உடைத்தாக

என்னும் தொடக்க அடிகளை உடையவையாகும்.

1. எல்லாச் செல்வங்களையும் உடையதாக விளங்குமாறு சோழநாட்டின் முடிபுனைந்து வீரபாண்டியனைப் புறமுதுகிடச் செய்தான். சிங்களப்படையை அழித்து அந்நாட்டைக் கைப்பற்றினான். தான் பெற்ற மதுரையின் ஆட்சிப் பொறுப்பைத் தன்னிடம் வந்து வணங்கிய விக்கிரமபாண்டியனுக்குக் கொடுத்து வீரக்கொடியுடன், தியாகக்கொடியையும் பறக்கவிட்டான்.



2. செல்வம் நிறைய, முடிபுனைந்த குலோத்துங்கன் நாட்டில் சுங்கவரியை நீக்கி உணவுப் பொருள்களை நிறைத்து, உயிர்களிடையே அமைதி நிலவச் செய்தான். வென்ற நாடுகளை இறைஞ்சி வந்த மன்னர்களுக்குத் திருப்பியளித்து மகிழச் செய்தான். இவ்வாறு பல மன்னரும் திறை செலுத்த அரசு வீற்றிருந்தான்.

3. சூரிய குலத்திற்குரிய முடிசூடி விளங்கிய குலோத்துங்கன் ஆட்சியில் மழை வளம் முதலிய எல்லா வளங்களும் நிறைந்தன. தன்னிடம் தோல்வியுற்ற பாண்டியனும் சேரனும் வந்து அடிபணிய, அவர்கள் முடிமேல் தன் அடிவைத்து அவர்களுடைய உரிமைப் பொருள்களை அளித்து வாழச் செய்த குலோத்துங்கன் வீரக்கொடியோடு தியாகக் கொடியையும் உயர்த்தி நின்றான்.

4. எல்லா அறமும் ஓங்கி வளரச்செய்த குலோத்துங்கனுடைய ஆட்சியாண்டு பத்தொன்பதில், செயங்கொண்ட சோழமண்டலத்தைச் சார்ந்த படை நாடு, முடை நாடு, பெராத்தி நாடு, பகை நாடு, பொத்தாப்பி நாடு ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் தலைவர்கள் சேர்ந்து செய்தது அறச்செயலாகும்.

குலோத்துங்கனுடைய ஆட்சியில் சோழநாட்டில் நல்ல மழை வளம் பெருகியது. நான்மறையின் ஒழுக்கங்கள் நடை முறையில் இருந்தன. திருமகளும் செயமகளும் என்றும் அவனிடம் குடிகொண்டிருந்தனர். வெண்கொற்றகுடை தண்ணளி செய்தது. வேந்தர் பலர் வணங்கி நின்றனர். நிலமகள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தாள். மனுநெறி தழைத்து, எல்லாத் திக்குகளிலும் சோழனுடைய சக்கரமும் செங்கோலுமே நடைபெற்றன. இவ்வாறு பலகாலம் நாடுகாக்க முடிபுனைந்து விளங்கினான் குலோத்துங்கன்.

குலோத்துங்கன் பாண்டியருடன் நடத்திய முதற்போரில் வீரபாண்டியனின் மகன் கொல்லப்பட்டான். எழுகம்படை, மறப்படை ஆகிய காலாட்படைகள் பல அழிந்தன. வீரபாண்டியனுக்குத் துணையாக வந்து போர் செய்த சிங்கள மன்னன் முதலாம் பராக்கிரம பாகுவின் படைவீரர்கள் தோல்வியுற்று, மூக்கறுபட்டுக் கடலில் ஓடி ஒளிந்தனர். வீரபாண்டியன் புறங்கொடுத்து ஓடினான். பாண்டியர் படைகளை முறியடித்த குலோத்துங்கன் மதுரையையும் அதன் அரசுரிமையையும் தனதாக்கிக் கொண்டான்.

குலோத்துங்கன் பாண்டிய நாட்டில் தான் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாக வெற்றித் தூண் ஒன்றினை நாட்டினான். பிறகு தன்னிடம் அடைக்கலமாக வந்து அடிபணிந்த பாண்டிய மன்னனுக்கு மதுரையையும் அதன் அரசுரிமையையும் கொடுத்தருளினான். அவ்வாறு பெற்றவன் விக்கிரம பாண்டியன் ஆவான்.

தான் பெற்ற நாட்டைத் திரும்பக் கொடுத்து மகிழ்ந்த சோழன் வீரக்கொடியும் தியாகக் கொடியும் ஒருங்கே எடுத்துப் பெருமை பெற்றான். செம்போன் வீரசிம்மாசனத்துப் புவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய மூன்றாம் குலோத்துங்கன் பரகேசரி என்னும் பட்டப் பெயர் பெற்றான்.

நாட்டில் கேள்வி ஞானமும் அறமும் கற்பும் நிறைந்து மன்னவன் புகழ் பெருகுகிறது. மனுநெறி தவறாது நீதி நடைபெற்று வந்தது. இத்தகு குலோத்துங்கனது ஆட்சியில் செயங்கொண்ட சோழ மண்டலத்தைச் சேர்ந்த பல நாட்டுத் தலைமை வாய்ந்த பெருமக்கள் கூடி அறச்செயல் ஒன்றினை வெளியிட்டார்கள். கூடிய தலைமக்களின் நாடுகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

### மூன்றாம் இராசராசன்

மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்திலேயே மூன்றாம் இராசராசன் இளவரசுப் பட்டம் பெற்றிருந்தான். குலோத்துங்கன் இறந்த பிறகு சோழப் பேரரசின் மன்னானான். அரசு முறைப்படி இச்செய்திகளை நோக்க மூன்றாம் குலோத்துங்கனின் மகன் மூன்றாம் இராசராசன் என்று கொள்ளப்படுகிறது. மேலும் சோழமன்னன் மரபுப்படி மூன்றாம் குலோத்துங்கன் பரகேசரிப் பட்டமும், மூன்றாம் இராசராசன் இராசசேகசரிப் பட்டமும் பெற்றிருந்தனர் என்பதும் இதனை வலியுறுத்தும்.

மூன்றாம் இராசராசனது ஆட்சியில் எட்டுத் திசையிலும் அவனது புகழ் பரவியிருந்தது. செல்வ மகளும் வெற்றிமடந்தையும் புகழின் செல்வியும் அவனை விரும்பி அடைந்தனர். மறைநெறியும் மனுநெறியும் சிறக்க, தமிழர் சுற்றம் உயர சோழப் பேரரசின் முடிசூடி விளங்கினான் இராசராசன்.



கொடிய கலியானது பாதாள உலகில் சென்று ஒளிந்தது. சோழனுடைய செங்கோலும் புலிக்கொடியும் மேருமலை வரை பரவி நாட்டின் எல்லையைக் குறித்தன. வெண்கொற்றக் குடையானது முழுமதி போல ஆகாய'ம் வரை உயர்ந்து நின்று தண்ணளி செய்தது. குடையின் பரந்த நிலையானது எட்டுத்திக்கு யானைகளுக்காக எழுப்பப்பட்ட கூடம் போல விளங்கியது. வெண்கொற்றக்கொடிக்கு இடையிடையே விளங்கிய இராசராசன் தன் திறத்தினால் குடிமக்களை நன்கு பாதுகாத்து நாட்டில் தோன்றிய உட்பகை, புறப்பகைகளாகிய இரு வகைப் பகைகளையும் நாட்டில் இல்லாதவாறு நீக்கினான்.

மேலுலகு கீழுலகு என்னும் ஈரேழ பதினான்கு உலகங்களையும் தன் ஆட்சிக்கு உட்படுத்திய இராசராசன், சூரியன் இயங்கும் மலையாகிய மேருமலையில் வீற்றிருக்கும் ஆண் புலியைப் போன்று வீரசிம்மாசனத்தில் வீற்றிருந்தான். தேவியாகிய புவனமுழுதுடையாளும் உடன் வீற்றிருந்தாள், இராசகேசரி என்னும் சோழ மரபின் பட்டமும் பெற்றிருந்தான் மூன்றாம் இராசராசன்.

மனுநெறி தவறாது அரசு புரிந்த மூன்றாம் இராசராசன் மிகுந்த புகழ் பெற்றான். அவனது பத்தொன்பதாவது ஆட்சியாண்டில் கற்பகக்கா என்னுமிடத்தில் (அரச மண்டபமாயிருத்தல் வேண்டும்) பல பகுதி மக்களும் கூடிய கூட்ட நிலையைக் குறிக்கும் மெய்க்கீர்த்தியாக அமைந்துள்ளது. இம்மெய்க்கீர்த்தி கூடியிருந்தவர்களின் விவரம்:

முத்தமிழ் நிறைந்த சித்தரமேழி என்னும் பெரிய நாட்டுப்பெருமக்கள்:

நான்கு திசையிலுள்ள பதினென் பூமிக்குரியோராகிய ஆயிரத்து ஐந்நூற்றுவராகிய பெருமக்கள்.

பவமண்டலம் என்னும் நாட்டைச் சேர்ந்த நாட்டுச் செட்டியார், தவனச் செட்டியார், ஜயபாலர் ஆகிய பெருமக்கள்

அறுபத்து நாலு முனையிலுமிருந்தவரும் வீரக் கொடியுடையார், சிற்பக் கலைஞர், கலன்கள் செய்வோர், கோலக்காரர் ஆகிய கலைஞர் பெருமக்கள் ஆகியோர் குறைவறக் கூடியிருந்தார்கள்.

## 1. பாண்டியர் (A.D. 550 - 1000)

இந்திய தீபகற்பத்தின் தென்கோடியில் அமைந்துள்ளது பாண்டிய நாடு. மதுரை நகர் பாண்டிய நாட்டின் தலைநகராகும். மகாபாரதம் சங்க இலங்கியங்கள் ஆகியவற்றில் பாண்டியர் குறிப்பிடப்படுகின்றனர். கல்வெட்டுகளில் அசோகனது கல்வெட்டுகளில் முதன் முதலாக பாண்டியரைக் காண்கிறோம். எனவே கிறிஸ்துவ சகாப்தத்திற்கு முன்பிலிருந்து பாண்டியர் இருந்துள்ளனர் என்பதை அறியலாம். மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் களப்பிரர் என்போர் மதுரையைப் பிடித்து ஆளத் துவங்கினர். சுமார் 300 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் பாண்டியர் தலைதூக்கினார்கள். பாண்டியர் வரலாற்றை இந்த இடத்திலிருந்துதான் கோர்வையாக எழுதமுடிகிறது. அவர்கள் கல்வெட்டுகள் 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 17-ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கின்றன. இந்தியாவிலேயே கிறித்துவ சகாப்தத்திற்கு முன்பேயிருந்து 17-ஆம் நூற்றாண்டு வரை அரசு கோலோச்சிய பழமையான அரச பரம்பரையினர் பாண்டியரே ஆவார்கள்.

களப்பிரர் வருகைக்கு முன் அரசாண்டவர்களை சங்க இலக்கியங்களில் அங்கும், இங்குமாகவே காணமுடிகிறது. அவர்களது வம்சாவளி, காலங்கள் இவைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இல்லை. கல்வெட்டுகளும் கிடைக்கவில்லை. சமீபத்தில் சங்ககால காசு ஒன்று கிடைத்துள்ளது. இதன் ஒரு பக்கத்தில் குதிரையின் வடிவமும், பெருவழுதி என்று பிராமியிலும் பொறிக்கப்பட்டு உள்ளது. மறுபக்கத்தில் பாண்டியர்களுக்கு உரிய இருமீன் சின்னங்கள் உள்ளன. இக்காசை வெளியிட்ட மன்னன் "பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன்" என்று அறியலாம். இவன் அஸ்வமேதயாகம் செய்ததை குதிரைச் சின்னம் அடையாளம் காட்டுகின்றது. முதலாம் வரகுணனின் (கி.பி.768-இல் முடிசூடியவன்) வேள்விகுடிச் செப்பேடு, பெருவழுதியும் அவனது வம்சத்தவர்களும் களப்பிரர் வருகைக்கு முன் அரசாண்டதாகக் கூறுகிறது. இக்காசின் காலம் கி.மு. அல்லது கி.பி. முதலாம் நூற்றாண்டாக இருக்கலாம். இம்மாதிரியான புதிய கண்டுபிடிப்புகள் சங்ககாலப் பாண்டியரை அறிவதற்கு பெரிதும் துணை புரிகின்றன.



மூவர் முதலியவர்களின் தேவாரங்கள், மாணிக்கவாசகரின் திருவாசகம் ஆகியவை சைவ உலகில் பக்தி மார்க்கத்தை பரப்புவதற்காக எழுதப்பட்ட பாடல்களே ஆகும். பாடல்கள் சிலவற்றில் பாண்டியர் வரலாறு சம்பந்தமான குறிப்புகள் காணப்படுவதால் முற்காலப் பாண்டியரைப் பற்றி அறிய அவைகளும் துணைபுரிகின்றன. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் போன்ற வைணவ பக்திப்பாடல்களும் பாண்டியரில் ஒரு சிலரைக் குறிக்கின்றன. சேக்கிழாரின் பெரிய புராணம் முற்காலப் பாண்டியரைப் பற்றி அறிய பெரிதும் துணை புரிகின்றன.

பாண்டியருக்கு தென்னவன், பஞ்சவன் என்ற பட்டப் பெயர்கள் உண்டு. இந்தியாவின் தெற்குக் கோடியில் இருப்பதால் தென்னவன் என்ற பெயர் பொருந்துகிறது. பஞ்சவன் என்றால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை அரசன் தேரனும் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவன்தான். இதனைக் கல்வெட்டுகள் "மீனவனாம் வீரகேரளன்" என்பதாகக் கூறுகின்றன. செல்வி நகர் நம்பியின் திருவிளையாடல் புராணமும் ஐந்து நிலத்தோங்கு நகர்கட்கெல்லாம் தலையாய பஞ்சவன் தன் மதுரை நகர் என்று கூறுகிறது. எனவே பஞ்சவன் என்றால் பாண்டியரின் மரபுப் பெயர் என்பதை அறியலாம்.

## சுந்தரபாண்டியன் (1104 - 1131)

திருமடந்தையும், ஜெயமடந்தையும், மெய்க்கீர்த்தியுடைய சடையவர்மன் ஸ்ரீ வல்லபன் 1101-இல் முடிசூடினான். இவனது மகன் சுந்தரபாண்டியனை மானாபரணன் 1104-இல் முடிசூடினான். தந்தையுடன் இணைந்து அரசு புரிந்தான். இவனது கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. பாண்டியர் மரபுபடி இவன் மாறவர்மன் சுந்தரபாண்டியனாக இருக்க வேண்டும். இந்தப் பின்னணியில் ஸ்ரீரங்கம் கல்வெட்டைப் பார்ப்போம். ஸ்ரீரங்கம் கல்வெட்டு துளுவ மன்னன் வீரகவி அலுப்பேந்திரனுடையது. முதல் ஆறு வரிகள் கிரந்த எழுத்தில் கன்னடத்தில் உள்ளன. அடுத்து உள்ள வரிகள் தமிழில் உள்ளன. இவன் கொங்கனத்தில் (துளுவநாடு) 1115-இலிருந்து 1155 வரை அரசாண்டவன்.

ஸ்ரீரங்கத்தில் உள்ள இவனது மெய்க்கீர்த்தி இவனுடைய ஆரம்ப காலத்தில் பொறிக்கப்பட்ட வகையைச் சார்ந்தது. இதன் காலம் 1114-இலிருந்து 1120 வரை இருக்கலாம்.

இலங்கை மன்னன் விசயபாகு தேவர் 1055 முதல் 1110 வரை அரசாண்டவன். இவன் 13-ஆவது வயதில் இறந்தான் என்று இலங்கைக் கல்வெட்டு கூறுகின்றது. விசயபாகு தன் சகோதரி மிட்டாவை நடு பாண்டிய மன்னனுக்குத் திருமணம் செய்து வைத்தான். மிட்டாவிற்கு மாணபூரணா, கிட்டி ஸ்ரீமேகா, ஸ்ரீ வல்லபா என்று மூன்று மகன்கள் பிறந்தனர். இவர்களில் மூத்தவனான மானாபரணன் விசயபாகுவின் மகள் ரத்தினாவளியை மணந்தான். கடைசி மகன் ஸ்ரீ வல்லபனுக்கு மானாபரணன் என்ற மகன் இருந்தான். இலங்கையில் கிடைக்கும் மற்ற கல்வெட்டுகளினால் விசயபாகுவின் மாப்பிள்ளையான மானாபரணன் (3) வீரப்பெருமாள் என்று அழைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## விசயநகர ஆட்சி

கி.பி.13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 14-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை முஸ்லீம்களின் ஆட்சி நடந்து முடிவுற்ற பின் விசயநகரப் பேரரசின் ஆட்சி தொண்டை நாட்டில் தொடங்கியுள்ளது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை விசயநகரப் பேரரசு இப்பகுதியில் ஆட்சி செலுத்தியுள்ளது. பல்லவப் பேரரசர்களது ஆட்சிக்குப் பிறகு தொண்டை நாட்டில் நிலையான ஆட்சியாக அமைந்திருந்தது விசயநகரப் பேரரசின் ஆட்சியேயாம்.

சோழப் பேரரசின் ஆட்சிக் காலத்திலும் பல்லவர்களது ஆட்சிக் காலத்திலும் அந்தணர்களது செல்வாக்கு இப்பகுதியில் ஏற்பட்டதால் வடமொழியின் செல்வாக்கும் ஓங்கத் தொடங்கியது. இம்மாவட்டத்தில் பல, வடமொழிப் பெயர்களாக அமைந்தது. அவ்விரு பேரரசர்களது ஆட்சிக்காலத்தில்தான் முஸ்லீம் அரசர்களது ஆட்சிக்காலத்தில் பல பகுதிகளில் உருதுச் சொற்கள் இடம்பெறத் தொடங்கின. அவர்களுக்குப் பின் அமைந்த விசயநகரப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு மொழிச் சொற்களின் ஆதிக்கம் இடம் பெறத் தொடங்கின.

இம்மாவட்டம் தமிழ்நாட்டின் ஒரு பகுதியான விளங்கினாலும் தெலுங்கு மொழி பேசும் மக்கள் மிகுதியாக இங்கு வாழ்ந்து வருகின்றதற்கு மூல காரணம் விசயநகர ஆட்சியேயாம். செட்டியார், ரெட்டியார், நாயுடு போன்ற சில குறிப்பிட்ட சாதியினர், தங்கள் தாய் மொழியாகவே தெலுங்கு மொழியைக் கொண்டு இம்மாவட்டத்தின் சில பகுதியில் மிகுதியாக வாழ்ந்து வருவதை இன்றும் காணலாம்.



சோழப் பேரரசர் காலத்தில் அந்தணர்கள் இங்கு குடியேற்றப்படுவதற்காகப் பல புதிய ஊர்கள் உருவாக்கப்பட்டது போன்று விசயநகரப் பேரரசர் காலத்தில் தெலுங்கர்களை இங்கு குடியேற்றுவதற்காகப் பல புதிய ஊர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய ஊர்கள் தெலுங்குச் சாயலைப் பெற்றிருப்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

## சம்புவராயர் குடிப்பெயர்

சம்புவராயர் என்னும் சொல்லைச் சம்பு + அரையர் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். சம்பு எனும் சொல் சிவபெருமானைக் குறிக்கும். சம்புவராயர்கள் சம்புவை (சிவனைத்) தங்களின் குல முதல்வனாகக் கொண்டிருந்தனர் எனலாம். வீரசம்பன், சம்பு குலப்பெருமாள் எனும் பெயர்களாலும் சம்புகுலத்தொருவன் சாத்துகைக்கு என வரும் இலக்கிய வரியாலும் இதனை அறியலாம்.

அரையர் எனும் சொல் சோழர் காலத்தில் வீரர்கள் தளபதிகள், அதிகாரிகள் போன்றோர்க்கு அவர்களின் பதவி நிலை குறித்து வழங்கப்பட்ட பட்டமாகும்.

சோழர்களின் கீழ் தங்களின் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய இவர்களின் குலப்பெயருடன் மன்னர்களால் வழங்கப்பட்ட பட்டத்தையும் சேர்த்து சம்புவராயர் என இவர்கள் அழைக்கப் பெற்றனர் எனலாம்.

அடுத்தபடியாக இவர்களின் கல்வெட்டுகளில் பெரும்பாலும் செங்கேனி எனும் சொல்லைத் தங்கள் பெயருக்கு முன் குறிப்பிடுகின்றனர்.

இப்பெயரை முதன் முதலில் பெற்று விளங்கிய சம்புவராயர் செங்கேணி சாத்த நாலாயிரவனான கரிகால சோழ செங்கேணி நாடாழ்வான் (கி.பி.1069) என்பவர் ஆவார்.

செங்கேணி சாத்தன் சோழனான சேநாபதிகள் (கி.பி.1085) செங்கேணி சம்புராஜன் நாலாயிரவன் அம்மையப்பனான ராஜேந்திர சோழ சம்புகராஜன் (கி.பி.1129) போன்ற பெயர்களில் இதனை அறியலாம்.

## சம்புவராயர்

சோழப் பேரரசு எனும் பெருமாளிகையை உருவாக்குவதில் தங்களை ஒப்படைத்துக் கொண்டு அம்மாளிகையைத் தாங்கும் வயிரமணித் தூண்களாக விளங்கிய பல சிற்றரசுக் குடும்பங்களில் சம்புவராயர் குடும்பமும் ஒன்றாகும்.

அதிராஜேந்திர சோழன் (கி.பி.1070) காலம் முதல் மூன்றாம் இராஜராஜ சோழன் (1216-1257) காலம் வரையிலும் சோழர்களின் கீழ் அதிகாரிகளாகவும், படைத்தலைவர்களாகவும், நாடு காவல் செய்பவர்களாகவும், சிற்றரசர்களாகவும், விளங்கிய இவர்களின் ஆட்சிப் பகுதி இன்றைய வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கை அண்ணா மாவட்டம் பகுதிகளை உள்ளடக்கியதாகத் திகழ்ந்தது.

சோழப் பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில் சேந்தமங்கலத்தி லிருந்து ஆண்ட காடவராயர் கோப்பெருஞ்சிங்கன் தன்னை ஒரு தன்னுரிமை பெற்ற அரசனாக அறிவித்துக் கொண்டார். அவரைப் போலவே முதன் முதலாகச் சம்புவராயர்களின் தன்னுரிமையுள்ள தனியாட்சியை நிறுவியவர் இராசகம்பீரச் சம்புவராயர் (1236-1268) என்பவர், வடார்க்காடு மாவட்டம், போளூர் வட்டத்தில் உள்ள படவேடு என்ற இடமே இவருடைய தலைநகராகத் திகழ்ந்தது. பின்னர் சம்புவராயர்கள் விசயகண்ட கோபாலன் (1250-1285) இவரால் தோற்கடிக்கப்பட்டு இவருக்குக் கீழும், பாண்டியர்களுக்குக் கீழும் சிற்றரசர்களாகவே இருந்தனர்.

இக்காலங்களில் பெயரளவிற்கே பாண்டியர்களின் கீழ் சம்புவராயர்கள் சிற்றரசர்களாக விளங்கினர். வீரசம்பன் சம்புவராயர் தன் பெயரில் நாணயம் வெளியிட்டு, தன்னுரிமை அதிகாரத்தை வெளிப்படுத்திக் கொண்டார். இவரைத் தொடர்ந்து மீண்டும் சம்புவராயர்களின் இரண்டாவது தனியரசை ஏற்படுத்தியவர்கள் ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயரும் (1306-1330) இவர் மகன் வென்றுமண் கொண்ட சம்புவராயரும் (1322-1339) ஆவர். வென்று மண் கொண்ட சம்புவராயரின் ஆட்சியைத் தொடர்ந்து இவருடைய புதல்வர்கள் திருமல்லிநாதன் இராசநாராயணன் சம்புவராயர் (1337 - 1367) (முதலாம் இராசநாராயணன்) பொன்னின் தம்பிரான் இராசநாராயணன் சம்புவராயர் (1338-1363) (இரண்டாம் இராசநாராயணன்) ஆகியோரும் ஆட்சி புரிந்தனர். கி.பி.1356-ல்



திருமல்லிநாதன், இராசநாராயணன் ஆகியோரும் ஆட்சி புரிந்தனர். கி.பி.1356-இல் திருமல்லிநாதன் இராசநாராயணன் தன் புதல்வன் இராசநாராயணன் திருமல்லிநாதன் சம்புவராயர் (மூன்றாம் இராசநாராயணன்) என்பவருக்குப் பட்டம் சூட்டித் தன்னுடன் ஆட்சிக்குத் துணையாக வைத்துக் கொண்டார்.

1363-இல் சம்புவராயர்களை விசயநகர மன்னன் கம்பணன் என்பவர் தோற்கடித்து இவர்களின் நாட்டைக் கைப்பற்றினார். போரில் இரண்டாம் இராசநாராயணன் கொல்லப்பட்டார். சம்புவராயர்களைத் தோற்கடித்த போதிலும், கம்பணன் நாட்டை மீண்டும் சம்புவராயர்களுக்கே கொடுத்து ஆளும்படி செய்தார்.மேலும் சம்புவராயர் குடும்பத்துடன் திருமண உறவும் வைத்துக் கொண்டார். இச்சமயத்தில் முதலாம் இராசநாராயணனும் இறந்து விட்டதால் இவரைத் தொடர்ந்து கி.பி.1379 வரை மூன்றாம் இராசநாராயணன் சம்புவராயர் ஆட்சி புரிந்தார். இவருடைய சிறப்புடன் சம்புவராயர்களின் தனியாட்சி முடிவுற்றது.

## முதலாம் இராசநாராயணன் (1337 - 1363)

வென்றுமண் கொண்ட சம்புவராயரின் புதல்வர்கள் இருவரில் மூத்தவர் இவரே. குட்டியத்தில் வென்று மண் கொண்ட சம்புவராயருக்காக கட்டப்பட்ட நினைவுக் கோயிலில். இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. ஒரு கல்வெட்டு "சகலலோக சக்கரவர்த்தி ஸ்ரீ இராசநாராயணன் சம்புவராயற்கு" என்று தொடங்கி வென்று மண் கொண்ட சம்புவராயரின் எரிசாம்பலைக் கொண்டு போய்க் கங்கையிலே விட்டுத் திரும்பிய அவருடைய அதிகாரி எழும்போதன் கெங்கையாடி மாதயன் என்பவருக்குக் குட்டியத்தை இராசநாராயண நல்லூர் என்று மாற்றி கங்காபுரி விருத்தியாக இச்சம்புவராயர் வழங்கிய செய்தியைக் கூறுகின்றது.

முதலாம் இராசநாராயண சம்புவராயரின் காலத்தன வையாக நமக்கு 67 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவை தவிரவும் ஆட்சியாண்டு சிதைந்து போன 9 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவற்றையும் இவருடையதெனக் கொண்டோமானால் மொத்தம் 76 கல்வெட்டுகள் இருவடையவையாகும்.

இக்கல்வெட்டுகள் இவருடைய காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள், மண்டபங்கள், இவரால் கொடை வழங்கப்பட்ட கோயில்கள், இவரின் கீழ் பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் வேளாண் வணிகப் பொருளியல் நிலைமை முதலியன பற்றிக் கூறுகின்றன.

## ஆட்சியேற்பு

திருவோத்தூர், கண்டாச்சிபுரம், ஆர்ப்பாக்கம், மாரங்கியூர், திருத்தலூர், உக்கல் ஆகிய ஊர் கல்வெட்டுகள் தரும் நாள் கோள் குறிப்புகளிலிருந்து இவர் கி.பி.3-2-1337-க்கும் 4-3-1337-க்கும் இடைப்பட்ட காலத்தில் முடிசூட்டப் பெற்றார் என்பதை அறிகிறோம். இவரின் தந்தை கி.பி.1339-ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் இறந்துவிடவே இவர் கி.பி.1340-இல் மன்னராக ஆட்சிப் பொறுப்பேற்றார்.

## ஆட்சிக்காலம்

உக்கலிலுள்ள 26-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டே (கி.மு.30.3.1362) இவருடைய கடைசி கல்வெட்டு ஆகும். இதிலிருந்து இவர் சுமார் 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார் என்று கூறலாம். ஆனால் அறிஞர்கள் காவேரிப்பாக்கத்தில் (அரக்கோணம்) உள்ள விசயநகர மன்னன் கம்பணனின் கி.பி. 5.7.1374 இதில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டில் மல்லிநாதன் சம்புவராயர் குறிப்பிடப்படுவதால் இவர் அந்த ஆண்டு வரை உயிருடன் வாழ்ந்தார் என்று கூறுகின்றனர்.

> "இவர்க்கு அத்யய(ன) பட்ட விருத்தி ஆய்
> மல்லி நாதன் சம்புவராயர் குடுத்து
> இவர் ஸர்வ மாந்யமாக அனுபவித்துப்
> போரூகையில் எங்கள் ஷேத்ரங்ஸத்துக்கு
> இந்த நிலங்களுக்கு விலையாக விற்று"

என்று முன்னர் இச்சம்புவராயரிடம் நிலம் பெற்ற ஒருவர் அதனை இப்போது விற்கும் போது அந்நிலம் தனக்கு யாரால் தரப்பட்டது என்று கூறுகின்ற இடத்தில் இச்சம்புவராயரால் தரப்பட்டது என்று விளக்கமாகக் கூறுகிறார்.



இதிலிருந்து இவர் கி.பி. 1374 வரை உயிருடன் இல்லை என்பது புலனாகிறது. கி.பி. 1363-இல் இவர் இறந்துவிட்டார் எனத் தெரிகிறது.

## பட்டப்பெயர்கள்

திருமால்பாடி, திருத்தலூர், மாரங்கியூர், திருப்புக்குழி, நாட்டேரி போன்ற ஊர்களில் உள்ள கல்வெட்டுகளில் அறியக்கூடிய பட்டப் பெயர்கள் வீரசம்பன், இராசகம்பீரன், வீரகம்பீரன், வென்று மண்கொண்டான் போன்ற பெயர்கள் இருந்ததென அறிகின்றோம்.

வென்று மண் கொண்ட சம்புவராயரின் இரண்டு மகன்களில் இளையவர் இவர். குட்டியத்திலுள்ள, இவருடைய கல்வெட்டு பொன்னின் தம்பிரான் இராச நாராயணன் என்றும், உதாரகுணராமன் சம்புவராயன் என்றும் இவர் பெயரைக் குறிப்பிடப்படுகின்றது.

## ஆட்சியேற்பு

கிடைத்துள்ள பல கல்வெட்டுகள் தரும் நாள்கோள் குறிப்புகளிலிருந்து இவர் கி.பி.1338-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ஆம் நாளுக்கும் ஏப்ரல் 10-ஆம் நாளுக்குமிடைப்பட்ட நாட்களில் முடிசூட்டப் பெற்றாரென அறிகிறோம். இவருடைய தந்தையின் சிறப்புக்குப் பிறகு கி.பி.1340 முதல் தனயனுடன் சேர்ந்து இவரும் ஆட்சிப் பொறுப்பேற்றார் எனக் கூறலாம்.

## ஆட்சிக்காலம்

இவருடைய கல்வெட்டுகள் தருகின்ற குறிப்புகளிலிருந்து இவர் கி.பி.18.11.1356 வரை ஆட்சி புரிந்தார் என்று தெரிகிறது. இதன் பிறகு இவருடைய அண்ணன் மகன் மூன்றாம் இராசநாராயண சம்பவராயன் கி.பி.6.11.1359-இல் புலியனூரில் எழுதியுள்ள கல்வெட்டில் இவர் குறிப்பிடப்படுவதால் இவர் 1359 வரை வாழ்ந்தார் என்றும், இதன் பின்னரும் கி.பி.1363 வரை வாழ்ந்திருக்கக் கூடுமென்றும் கருதப்படுகின்றது.

# பொருளாதாரம்

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளிலிருந்து பெறப்பட்ட பொருளாதாரம் பற்றி செய்திகள் பின்வறுமாறு, இக்கல்வெட்டுகளில் பெரும்பான்மையான கல்வெட்டுகளில் கோயிலுக்கு திருநந்தா விளக்கு எரிக்கவும், பால், தயிர் போன்ற அபிகேத்திற்கு பயன்படும் பொருட்டு பசுக்களை தானமாக வழங்கியதைப்பற்றி உள்ளது.

ஏன் இக்கோயிலுக்கு பசுக்களை அதிகமாகக் கொடுத்துள்ளனர் என்றால் இப்பகுதி முல்லை நிலம் ஆதலால் கால்நடை வளர்ப்பு மிக முக்கிய தொழிலாக இருந்துள்ளது. முல்லை நிலம் பசுமையும் நல்ல வளத்துடன் காணப்பட்டதால் கால்நடைகளும், மக்களும் செல்வ செழிப்புடன் வாழ்ந்தமை தெளிவாகத் தெரிகிறது.

சில கல்வெட்டுகள் இக்கோயிலில் நடனம் புரிபவர்கள் மற்றும் கைக்கோளர் போன்றவர்களுக்கு நிலங்கள் தானமாகவும், தொழில் செய்யவும் கொடுக்கப்பட்டுள்ளதைத் தெரிவிக்கின்றன. இந்த நிலங்களிலிருந்து வரிவசூல் செய்யப்பட்டு அப்பணம் கோயிலின் திருவிழாக்களுக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**விவசாயம்**

திருவானைக்கோயில் ஊரைச் சுற்றியுள்ள நிலங்கள் வளமான மண்ணாகவும், பசுமையாகவும், நீர்வளம் மிக்கவொரு நிலமாக இருந்ததுள்ளது. இன்றளவும் இவ்வூரில் விவசாயம் மிக்க செழிப்புடன் நடைபெறுகிறது. இதன் காரணமாகத்தான்



இக்கோயிலுக்கு நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நிலங்களிலிருந்து வரிவசூல் செய்யப்பட்டுள்ளது.

**நில தானங்கள்**

இக்கோயில் கல்வெட்டுகளில் கூறப்பட்ட நில தானங்கள் கோயிலில் நடனம் புரிகின்ற பெண்களுக்கும், கைக்கோளர் (நெசவுத்தொழில் செய்பவர்கள்) போன்றவர்களுக்கு தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு நம்பர் 356-இல் இக்கோயிலுக்காக புலிப்பாக்கத்தில் வேணாபுடையான் என்பவர் (கைக்கோளர்) நிலம் வாங்கி, அதிலிருந்து வரும் வரிமூலம் கோயில் வழிபாடு, திருவிழாக்களுக்குப் பயன்படுத்தி உள்ளனர்.

**அளவு முறைகள்**

இக்கோயில் கல்வெட்டில் “வேலி” என்ற நில அளவு முறையே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வேலி என்பது 20 மா. மூன்று வேலி நிலம் 60 மா அளந்து கோயிலுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலத்திலிருந்து வரும் வரி, பொருட்கள் முதலியவற்றை கோயில் திருவிழாக்கள், வழிபாட்டிற்கும் பயன்படுத்தியுள்ளனர்.

**மக்கள்**

இவ்வூரில் சுமார் 20 குடும்பங்கள்தான் உள்ளது. அதில் பெரும்பான்மையோர் இருளர்கள் ஆவர். மீதம் உள்ளவர்கள் விவசாயிகளாக உள்ளனர். இக்கோயிலை திரு.தி.வெ.முத்து குருக்கள் என்ற பரம்பரையினர் செவ்வனேப் பாதுகாத்து வருகின்றனர்.

**தொழில்**

பெரும்பான்மையோர் இருளர்களாக இருப்பினும் அவர்களில் சிலர் விவசாயம் செய்கின்றனர். சிலர் மட்டும் அவர்கட்குரிய குலத்தொழிலை செய்கின்றனர். மற்ற குடும்பத்தினர் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். விவசாயமாக எள், நெல், வேர்க்கடலை இவற்றை விளைவிக்கின்றனர்.


**வழிபாடும், திருவிழாக்களும்**

இக்கோயிலில் அனைத்துக் கிருத்திகையும் சிறப்பான அபிஷேகத்துடன் நடைபெறுகிறது. அனைத்து தினமும் காலையில் நித்திய பூஜையும், பரிவட்ட உற்சவம், தை மாதம் மாசி மாதங்களில் சிறப்பாக நடைபெறுகிறது. சிவபெருமானுக்குரிய பிரதோசங்கள் ஒவ்வொரு மாதமும் சிறப்பாகவும், முறையாகவும் நடத்தப்படுகிறது. வேறு எந்தவொரு சிறப்பான திருவிழாக்களும் சொல்வதற்கில்லை. மேற்கூறிய திருவிழாக்களும், வழிபாடுகளும் கோயிலுக்கே உரிய நிலத்தில் இருந்து வரும் ஆண்டு வருமானத்தை வைத்து கோயிலின் அறங்காவலர் திரு.தி.வெ.முத்து குருக்கள் அவர்களின் பரம்பரையினரால் மேற்கொண்டு செயல்படுத்தப்படுகிறது.




# எடுத்தாண்ட நூல்கள்


| | | |
|---|---|---|
| 1. | சிற்பச் செந்நூல் | சிற்பகலாரத்தின, சிற்பகலாநிதி, வை.கணபதி ஸ்தபதி மேலவர் தமிழ்நாடு அரசு கட்டிடக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம் (Pg-8) |
| 2. | ஆகமம் | Pg 30 - 31 |
| 3. | இந்திய தத்துவக் களஞ்சியம் | Vol - VIII, 17 - 19 |
| 4. | இந்திய தத்துவக் களஞ்சியம் | Pg 25 - 26 |
| 5. | இந்திய தத்துவக் களஞ்சியம் | Pg 28 |
| 6. | தமிழர் வரலாறும் பண்பாடும் | வே.தி.செல்வம், Pg-49, |
| 7. | தமிழர் வரலாறும் பண்பாடும் | Pg 43-45 |
| 8. | தமிழர் வரலாறும் பண்பாடும் | Pg 50 - 51 |
| 9. | தமிழர் வரலாறும் பண்பாடும் | Pg 154 - 159 |
| 10. | Ancient India (From the Earliest times to 1320 AD) | V.C. Pandey (&) U.S., Khattri Prakasham Kendra - Lucknow, Pg. 561-565 |
| 11. | பல்லவ பேரரசர் | டாக்டர் மா.இராசமாணிக்கம், Pg. 54 - 66 |
| 12. | பல்லவ பேரரசர் | டாக்டர் மா.இராசமாணிக்கம், Pg. 24 - 25 |
| 13. | தமிழக கோயிற்க் கலைகள் | முனைவர் இரா.நாகசாமி, மா. சந்திரமூர்த்தி. Pg. 30 - 31 |
| 14. | தமிழக கோயிற்க் கலைகள் | முனைவர் இரா.நாகசாமி, மா. சந்திரமூர்த்தி. Pg. 53 - 62 |
| 15. | காசியப சில்ப சாஸ்திரம் | Pg. 72, 74-75 |
| 16. | காசியப சில்ப சாஸ்திரம் | Pg. 104 - 105 |
| 17. | செற்பச் செந்நூல் | Pg. 60 |
| 18. | மேல்பாடி | பூ. கல்பனா Pg.28 |




கோயிலின் தரைப் படம்






கோயிலின் தென் பக்கத் தோற்றம் (வரைபடம்)

# நிழற்படங்கள்



கோயிலின் வடக்குப் பக்கத் தோற்றம்





கோயில் முன்மண்டப வடகிழக்குத் தோற்றம்



கோயில் விமானத்துடன் கூடிய தென்கிழக்குத் தோற்றம்





கோயில் கருவறை வடக்குப்பக்கத் தோற்றம்




கோயில் கோபுரத்துடன் கூடிய தென்கிழக்குத் தோற்றம்






கோயில் அதிட்டானத்தில் (ஜகதி) பொறிக்கப்பட்ட கல்வெட்டுத் தோற்றம்



ஜகதியில் உள்ள கல்வெட்டு






நிருக்த கணபதி



தட்சணாமூர்த்தி





மகா விஷ்ணு



பிரம்மா





துர்க்கை



தேவி செப்புத்திருமேனி





பெருமாள் செப்புத்திருமேனி

